Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 21 திங்கட்கிழமை (06-11-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:277

# உடனடியாகப் போர் நிறுத்தம் செய்து பேச்சைத் தொடங்குக!

## 45 யாழ்.அமைப்புகள் கூட்டாக சந்திரிகாவுக்கும் பிரபாவுக்கும் அழைப்பு

யாழ்ப்பாணம்,நவம்பர்6

**நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கு உதவும் பொருட்டு உடனடியாகப் போர் நிறுத்தம் செய்து மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடங்குக.**

**இவ்வாறு யாழ்ப்பாணத்தில் இயங்கும் நாற்பத்தைந்து சமய, சமூக, தொண்டர், மனித நேய அமைப்புகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடமும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடமும் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன.**

**நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடல் ஒன்றில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்றுக்காலை அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் விசேட கலந்துரையாடல் நடை பெற்றது. அங்கு இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு மீட்பு

மட்டக்களப்பு,நவ.6

அம்பாறையில் இருந்து பொத்துவில் நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றில் இருந்து நேற்றுக் காலை 10 மணியளவில் குண்டு

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தரப்பில் இருவர் உயிரிழப்பு

வவுனியா,நவ.6

திருகோணமலைத் துறைமுகத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த தாக்குதலில் தமது தரப்பில் கடற்கரும்புலிகளான லெப்டினன்ட் கேணல் நரேஸ் (முருகேசு பிரேமகுமார் - யாழ்ப்பாணம்), மேஜர் சுடர்மணி அல்லது செங்கதிர் (சிவராசா சிறீதரன் - யாழ்ப்பாணம்) ஆகியோர் உயிரிழந்தனர் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் கடற்படையினரின் டோரா சேதம் அடைந்தது என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

## பாப்பரசரிடம் கோரிக்கை

விடுதலைப்புலிகளின் காவலில் உள்ள படையினரைப் பார்வையிட அனுமதி பெற்றுத் தருமாறு காணமற்போன படையினரின் பாதுகாவலர் சங்கம் பாப்பரசரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா ஊடாக பாப்பரசரிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு கடிதம் ஒன்றைப் பாப்பரசருக்கு அனுப்பியுள்ளது. (இ-3-8)

## ஈழத் தமிழ்க் குழுக்கள் லண்டனிலும் மோதல்!

### யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் பலி

லண்டன்,நவ.6

லண்டனில் சான்ஸ்புலோ என்னும் இடத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற தீபாவளிக்கலைவிழாவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு பிரிவினருக்கிடையில் இடம் பெற்ற மோதலில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார்; மற்றும் மூவர் காயம் அடைந்தனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

தீபாவளியை ஒட்டி கலைவிழா ஒன்று நேற்றுக் காலை ஏற்பாடாகியிருந்தது. சுமார் 500 பேர் இதில் பங்குபற்றியிருந்தனர். இவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். விழா நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் கலை நிகழ்ச்சி தொடர்பாக இருதரப்புக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

கலவரத்தில் ஈடுபட்டவர்களை பொலீஸார் அங்கிருந்து வெளியேற்றி விட்டனர்.

வெளியேறியவர்கள் வீதியில் நின்று கைகலப்பில் ஈடுபட்டனர்.

இந்தக் கைகலப்பில் இருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினர். அவர்களில் ஒருவரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மனோராஜ்

(10ஆம் பக்கம் பார்க்க)

## திருமலைத் துறைமுகத்தைத் தாக்க புலிகள் மீண்டும் முயற்சி

### ஒரு வள்ளம் வெடித்துச் சிதறியது

கொழும்பு,நவ.6

திருகோணமலைத் துறைமுகத்தைத் தாக்குவதற்கு நேற்றுமுன்தினம் இரவு 8.20 மணியளவில் விடுதலைப்புலிகள் முயற்சி மேற்கொண்டனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அது வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இராணுவத்தினர் வழங்கிய தகவலின் பேரில் கெட்டியாரக்குடா கடற்பரப்பில் ரோந்து சென்ற கடற்படையினர் உள் துறைமுகத்தை நோக்கி இருவள்ளங்கள் செல்வதை அவதானித்தனர்.

இந்த வள்ளங்களின் மீது கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு வள்ளம் வெடித்துச் சிதறியது; மற்றைய வள்ளம் தப்பிச் சென்றுவிட்

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேச்சு நடத்த அரசாங்கம் நடவடிக்கை

### லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.6

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

நோர்வே மூலம் இந்த முயற்சி மேற்கொள்ளப் படுவதாகவும் அவர் கூறினார்.

கடந்தவாரம் யாழ்.மாவட்ட ஐ.தே. கட்சியின் நடாளுமன்ற உறுப்பினரான தி.மகேஸ்வரனுடன் அவர் நடத்திய கலந்துரையாடலின் போதே இதைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் இருவருக்கும் இடையில் அரைமணி நேரம் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டியது அவசியம் என்று அமைச்சரிடம் வலியுறுத்திய மகேஸ்வரன் அதற்கான வழிமுறைகளையும் எடுத்துக் கூறினார்.

யாழ்ப்பாண மக்களின் போக்குவரத்துப் பிரச்சினைக்குத் தீர்வுகாண யாழ்ப்பாணத்திலிருந்து ஆனையிறவு ஊடாக செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் தரை வழிப்பாதை ஒன்றைத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மகேஸ்வரன் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

இது விடயமாக ஆராய்வதாக அமைச்சர் பதில் அளித்தார்.(இ-3)

## மாவீரர் வாரத்தையொட்டி கொழும்பில் கூடுதல் பாதுகாப்பு

### புலிகள் தாக்கலாம் என அச்சம்

கொழும்பு,நவ.6

மாவீர் வாரத்தையொட்டி கொழும்பு நகருக்குள் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்துவதைத் தடுக்கும் வகையில் விசேட பாதுகாப்புத் திட்டம் ஒன்று அமுல் செய்யப்படவிருப்பதாக பதில் பொலீஸ் மா அதிபர் பி.சு.ஆனந்தராசா தெரிவித்துள்ளார்.

இதற்காக விசேட பயிற்சி அளிக்கப்பட்ட பொலிஸாரைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழு சோதனை நிலையங்கள் இல்லாத இடங்களில் திடீர் வீதித்தடைகளை அமைத்து சோதனையில் ஈடுபடும்.

வாகனங்களை மட்டுமன்றி பொது மக்களையும் இந்தக் குழு விசாரணை செய்யும். இதன்மூலம் விடுதலைப்புலி உறுப்பினர்களைக் கைது செய்யமுடியும் - இப்படி அவர் மேலும் சொன்னார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல்லுக்கு குழந்தை பலி 13 பேர் காயம்

மட்டக்களப்பு,நவ.6

மட்டக்களப்பு மாவட்டம்- ரமேஸ்புரம் பகுதி மீது நேற்று இரவு 7 மணியளவில் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதில் இரண்டரை வயதுக் குழந்தை ஒன்று உயிரிழந்தது; 13 பேர் காயமடைந்தனர்; 12 வீடுகள் சேதமடைந்தன.

செங்கலடி இராணுவ முகாமின் முன்னணிக் காவலரண்மீது நேற்று மாலை துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதாகவும் அதற்குப் பதிலடியாகவே ஷெல்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும்- தெரிவிக்கப்பட்டது.

## சமாதானத்தை எட்டுவதற்கு ரணில் பூரண ஆதரவு

### சொல்ஹெய்முடனான சந்திப்பில் உறுதி தெரிவிப்பு

கொழும்பு,நவ.6

சமாதான சூழ்நிலை உருவாக அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் பேச்சுக்களை ஆரம்பிக்க ஐ.தே.கட்சி பூரண ஆதரவு வழங்கும் என அக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நோர்வே நாட்டின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்முடன் நடத்திய பேச்சுக்களின்போதே அவர் இந்த உறுதி மொழியை வழங்கினார்.

வன்னியில் விடுதலைப்புலிகள் தலைவர் வே.பிரபாகரனுடன் நடத்திய பேச்சுக்களின் விவரங்களை விசேட தூதர் ரணிலுக்கு விளக்கினார்.

விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் பேச்சு நடத்தி சமாதான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும் என்று வற்புறுத்தி வந்தோம். அந்த நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை. இரு தரப்புக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் பூரண ஆதரவை வழங்குவோம்.

இப்படி ரணில் உறுதிமொழி வழங்கியுள்ளார். (இ-3)

## அரசு - புலிகள் பேச்சில் கலந்து கொள்ள ஐ.தே.கட்சி விருப்பம் தெரிவிப்பு

கொழும்பு,நவ.6

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம் பெறும் பேச்சுவார்த்தைக்கு தமது கட்சி அழைக்கப்பட்டால் அந்தப் பேச்சில் கலந்துகொள்ளத் தயாராக விருப்பதாக ஐ.தே.கட்சியின் பேச்சாளர் கருணசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

கொழும்பு செய்தி ஏஜென்ஸிக்கு அளித்த பேட்டியில் அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

(10ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி

அன்பர்களும், நிறுவனங்களும், பாடசாலைகளும், ஆலயங்களும், சமூக நிலையங்களுமாக் நேற்று(05-11-2000) 'நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி'க்கு தமது அன்பளிப்புக்களை வழங்கியிருந்தன. அவர்களின் விவரங்கள் நாளைய உதயனில் வெளிவரும்.

நேற்றுவரை இந்நிதிக்குக் கிடைத்த மொத்தத் தொகை ரூ 373,964/=

# நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு

நெல்லியடி,நவ.6

புலோலி தெற்கு புற்றளை பிள்ளையார் ஆலயக் கிணற்றிலிருந்து கை, கால் கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட இளைஞனின் சடலத்தை பிரேத பரிசோதனை செய்த மந்திகை மருத்துவமனையின் முன்னாள் பதில் மாவட்ட வைத்திய அதிகாரியை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த 15-10-1999 இல் நடைபெற்ற இச் சம்பவத்தில் புலோலி தெற்கு சாரையடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பத்மநாதன் (வயது-28) என்பவரே சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இது சம்பந்தமான வழக்கு விசாரணை கடந்த முதலாம் திகதி மீண்டும் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் முன்னிலையில் நடைபெற்றது.

இறந்தவரது சடலத்தை அக்காலப்பகுதியில் பிரேத பரிசோதனை செய்த மருத்துவமனையின் பதில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ரஞ்சினி சிதம்பரநாதன் தற்பொழுது கொழும்பு தேசிய மருத்துவமனையில் பணிபுரிந்து வருவதனால் இவ்வழக்கு விசாரணையின் போது நேரில் சமுகம் அளித்து சாட்சியம் அளிக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் அழைப்பாணை விடுத்த போதிலும் இதுவரை பதில் மாவட்ட வைத்திய அதிகாரி மன்றில் சமுகமளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்தே குறித்த பதில் மாவட்ட வைத்திய அதிகாரியை எதிர்வரும் 6-12-2000ஆம் திகதி மன்றில் தோன்றி சாட்சியமளிக்குமாறும், தவறின் மன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்படும் என்றும் பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் பொலீஸாரைப் பணித்துள்ளார்.

(இ-109)

## செயன்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம்,நவ.6

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய ஜி.சீ.ஈ. (சாதாரணதர) மாணவர்களுக்கான நடன பாடச் செயன்முறைப் பரீட்சை நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு நெல்லியடி கிறிஸ்ரன் கல்வி நிலையத்தில் நடைபெறவிருக்கின்றது.

(இ-3)

## அறிவித்தல்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி, முக்கிய விடயமாக தொகுதி அமைப்பாளர், கட்சி அங்கத்தவர்கள், தொண்டர்கள் யாவருடனும் அவசரமாக சில விடயங்கள் குறித்து ஆராயவுள்ளது.

இதற்காக எதிர்வரும் புதன்கிழமை 08.11.2000 பி.ப. 2மணிக்கு (புதியநேரம்) சமுகம் தரும் வண்ணம் தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

*ஒன்று கூட வேண்டிய இடம்:-*

*அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் செயற்குழு,*
*வெலஸ்ரா இன்டஸ்ரீஸ் கட்டடம்,*
*குளப்பிட்டி றோட்,*
*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.*

அகில இலங்கைத்
தமிழ்க் காங்கிரஸ் கட்சி.

(80242)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எங்கள் கல்லூரி அதிபராகப் பணியாற்றி வருபவரும் எமது பழைய மாணவர் சங்கத்தினால் முன்னெடுக்கப்படும் நவரட்ணராஜா ஞாபகார்த்த விளையாட்டுத்திடல் புனரமைப்பும், விஸ்தரிப்பும் மற்றும் கூடைப்பந்தாட்டத்திடல் அமைப்பு, நூலக வாரம், அமரத்துவம் அடைந்த அதிபர்கள் தினம், கல்வி விளையாட்டுத் துறை ஊக்குவிப்பு, பழைய மாணவர்களைக் கௌரவித்தல் போன்ற சகல விடயங்களிலும் உந்து சக்தியாக விளங்கும் எமது சங்கத்தலைவருமாகிய,

**திரு.ந.சிவகடாட்சம்** அவர்கள்

நீதி அமைச்சினால் யாழ். மாவட்டச் **சமாதான நீதிவானாக** நியமிக்கப்பட்டுள்ளமையையிட்டு, எமது சங்கம் மிக்க மகிழ்ச்சியடைந்து, அன்னாரைப் பாராட்டுகின்றது. அவர் நீடு வாழ்ந்து, தன்னலமற்ற பணியைத் தொடர எமது அன்பார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*பழைய மாணவர் சங்கம்,*
*கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.*

(80237)

## இணைந்த கணிதம்

Mr.T.தவசேகர் B.Sc.

A/L 2002

சார்புகள் - Mon 3 - 4.30
நிலையியல் - Wed 6.45 - 7.45 a.m.
எறியம் - 3 - 4.30

A/L 2001 + 02 தமிழ்

Mr.அருள்

கலைப்பிரிவு நடைபெறுகின்றது

SHAMROCK

(C/13717)

## ராஜா யாழ்ப்பாணம்

இன்று முதல்
குதூகல ஆரம்பம்.

பிரசாந்,ரம்பா,
மணிவண்ணன், ராதிகா,
விவேக் மற்றும் பலர்
நடிப்பில்

பூமகள் ஊர்வலம்

காட்சிகள்:10.30,2.00 (பு.நே)

(C/13648)

## நாகம்ஸ் சுன்னாகம்

அஜித (இரு வேடம்),
சிம்ரன், விவேக் நடித்த

வாலி

(நீல்ஸ்) காட்சிகள்- 11.00, 2.30 (பு.நே.)

(c/13672)

## IBS கல்வி நிறுவனம்

கோயில் வீதி, யாழ்.

- தரம் 4,5,6,7,8 க்கான மீட்டல் வகுப்புகள்
- தரம் 5க்கான புலமைப் பரிசில் விசேட வகுப்புகள்
- G.C.E. (O/L) Paper Class

தரமான ஆசிரியர்கள்
உயர்வான கல்வி

(80224)

## 2001 A/L DAY CLASS

கணக்கீடு

*ஆரம்பம்:* 8.11.2k 8.30 am

*ஆசிரியர்:* S.தவா B.Com

வாணி

சுன்னாகம்.

(80234)

## நீங்கா நினைவில் ஓராண்டு

உதயம்
01
-
06
-
1960



அஸ்தமனம்
19
-
10
-
1999

### திருமதி நிறோஜினி ஆனந்தராசா (வவா)

திதி: 06.11.2000

பண்பின் திருவுருவே ! பாசத்தின் பிறப்பிடமே!!
அன்பின் உறைவிடமே ! ஆருயிரே!! அம்மாவே !!!
ஆண்டொன்று சென்றாலும் ஆறிடுமோ எம் துயரம்?
வாடுகின்றோம் உன்நினைவால் வாழ வழி காட்டிடுவாய்!

என்றென்றும் உம் பிரிவால் துயருறும்
கணவன், மகன்,
தகப்பன், சகோதரர்கள்.

*ஒஸ்கா வீதி,*
*உரும்பிராய் தெற்கு.*

(C/13715)

## கண்ணீர்ப் பூக்கள்



### சபாரெட்ணம் சூரியகுமாரன் (ராஜு)

(முன்னாள் மித்திரன் இணையாசிரியர் - வீரகேசரி நிருபர்)

சென்னையில் காலமான எமது குடும்ப நண்பனும் பத்திரிகையாளனுமான சூரியகுமாரனின் மறைவுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கும் உடன்பிறப்புகளுக்கும் எமது ஆழ்ந்த அனு தாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"இப்பாரில் சிந்தை குளிர சிரித்தொளிரும்
உன்முகத்தை எப்பாரில் காண்போம் இன? "

*கச்சேரியடி*
*யாழ்ப்பாணம்.*

*நந்தகுமார் குடும்பம்.*

(C/13716)

## 33ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
20
-
05
-
1944



விண்ணில்
05
-
10
-
2000

### அமரர் தம்பையா சொர்ணலிங்கம்

அன்பின் நாயகனே! பாசமுள்ள அப்பாவே!

மண்ணுலக வாழ்வை இடைநடுவில் விட்டு
விண்ணுலகம் சேர்ந்த உங்கள் பிரிவை
எண்ணி யெண்ணிக் காலமெல்லாம்
உண்ணாமல் உறங்காமல் தவிக்கின்றோம்!
எங்கள் மணக்கோலம் காணமுன்பே
உங்கள் பிணக்கோலம் கண்டோமையா
திங்கள் ஒன்று ஆனதையா
தங்கள் பிரிவால் வாடுகின்றோம்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.*

(80229)

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

## திருமண அழைப்பு

உ
சிவமயம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் ஐப்பசி மாதம் 23ம் நாள் (08.11.2000) புதன்கிழமை முற்பகல் 9.05 மணிமுதல் 10.00 மணி வரையுள்ள தனு லக்ன சுபநன் முகூர்த்த வேளையில்.

எமது புத்திரன்
திருநிறைச் செல்வன்
**தயாபாலன்**
ஆசிரியர். யா/மத்திய கல்லூரி.
அவர்கட்கும்



எமது புத்திரி
திருநிறைச் செல்வி
**சசிகலா**
அவர்கட்கும்

*திருவருள் துணைகொண்டு தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

கங்கை ஓ(f)செற் பிறின்டேர்ஸ்
(விஜயசிங்கம் குடும்பம்)
166/3 நாவலர் றோட்.
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி. சி. தம்பிராஜா
(ராஜா மெடிக்கல்ஸ்)
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அருகாமை.
காங்கேசன்துறை வீதி.
சுன்னாகம்

*இரு வீட்டார் அழைப்பு*







**பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலையைக் கண்டித்து வன்னி பத்திரிகையாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த பேரணி கடந்த மாதம் 24ஆம் திகதி நடைபெற்றது.**

**மூன்று இனங்களைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள், செய்தியாளர்கள், ஊடகவியலாளர்களுடன் மதத் தலைவர்களும் அரசியல் பிரமுகர்களும் உட்பட நூற்றுக்கணக்கானோர் சுலோக அட்டைகளை சுமந்தபடி வாயைக் கறுப்புத் துணிகளால் கட்டிக்கொண்டு பேரணியில் அணிவகுத்துச் சென்றனர்.**

**பேரணியில் எடுக்கப்பட்ட இரு படங்களை மேலே காணலாம்.** (ஐ)

# மன்னாரில் உண்ணாவிரதம்

பண்டாரவளை புனர்வாழ்வு முகாம் படுகொலை மற்றும் பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை ஆகிய சம்பவங்களைக் கண்டித்து நேற்று முன்தினம் மன்னாரில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது.

இங்குள்ள செபஸ்தியான் தேவாலயம், லூர்த்துமாதா ஆலயம் ஆகிய இரு இடங்களில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

காலை 8.00 மணி தொடக்கம் பகல் 2.00 மணி வரையும் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு, மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான மனித உரிமைகள் ஆணைக் குழு ஆகியவை இணைந்து இவ் உண்ணாவிரதப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

இந்த உண்ணாவிரத முடிவில் செஞ்சிலுவை சர்வதேசக் குழு ஊடாக ஐ.நா.பொதுச் செயலாளர் கோபி அனானுக்கு மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டது. (இ-5)

# நோர்வேயின் சமாதான முயற்சிக்கு சிஹல உறுமய அமைப்பு கடும் எதிர்ப்பு

## பிரதமர் ரத்னசிறியைப் பதவி விலகக் கோரிக்கை

கொழும்பு,நவ.6

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் நோர்வேக்கும் இடையில் நடைபெறும் பேச்சுக்களுக்கு சிங்களத் தீவிரவாத அமைப்பான சிஹல உறுமயவும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுடன் சமாதானம் குறித்துப் பேச்சு நடத்தியதற்காக பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க உடனடியாக பதவி விலக வேண்டும் எனவும் சிஹல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விவகாரம் குறித்து சிஹல உறுமயவின் பொதுச் செயலாளர் திலக் கருணாரட்ண வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விடுதலைப் புலிகளுடன் எந்த வகையான பேச்சுக்களும் நடத்தப்பட மாட்டாது எனவும்-

விடுதலைப் புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியாக முறியடிப்பதற்கு மேலும் ஆறு வருடங்களுக்கு அவகாசம் தரும்படியும் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் தேர்தல் பிரசார மேடைகளில் கூறிவந்தார்.

ஆனால் பிரதமரின் பேச்சுக்கு பதிலடி கொடுப்பது போன்று நோர்வேயின் தூதுவர் பிரபாகரனுடன் தற்போது பேச்சு நடத்தியுள்ளார்.

எனவே இந்த விவகாரங்களை எடுத்துக்காட்டிப் பிரதமர் உடனடியாகப் பதவி விலக வேண்டும் அல்லது புலிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுப் பற்றிய விவகாரங்களை பகிரங்கமாகக் கண்டித்து தனது எதிர்ப்பை வெளியிட வேண்டும்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகள் எனக் கூறப்படும் பகுதிகளுக்கு அரசாங்கம் மருந்துப் பொருள்களையும் உணவுப் பொருள்களையும் அனுப்பக்கூடாது.

வன்னியில் உணவு மற்றும் எரிபொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என வன்னிக்குச் சென்று திரும்பிய நோர்வேயின் விசேட தூதுவர் தெரிவித்துள்ளார். இதன் மூலம் அவர் இலங்கையில் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டுள்ளார். எனவே உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டமைக்காக நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மை உடனடியாக நாடு கடத்தவேண்டும்.

இப்படித் திலக் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் நோர்வேக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுக்களை உடனடியாக நிறுத்தவேண்டும் என ஜே.வி.பி.யும் அவசர கோரிக்கை விடுத்திருப்பது தெரிந்ததே. (இ-7)

### வன்னியிலிருந்து 700 பேர் வருகை

வவுனியா,நவ.6

வன்னிப் பிரதேசத்தில் இருந்து கடந்த வெள்ளியன்று 700பேர் வவுனியா வந்தடைந்தனர். இங்கிருந்து 509 பொதுமக்கள் பிரமணாலங்குளம் சோதனை நிலையத்தினூடாக வன்னிக்குப் பயணமானார்கள். (அ)

### வயோதிபர் கொலை

வவுனியா,நவ.6

வவுனியா வேப்பங்குளம் பகுதியிலுள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றின் காவலாளியான 80 வயது வயோதியர் ஒருவர் மர்மமான முறையில் கடந்த வெள்ளியன்று இரவு வெட்டிக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து இடம்பெயர்ந்து வேப்பங்குளம் நலன்புரி நிலையத்தில் இருந்த கே.துரைசாமி என்பவரே கொல்லப்பட்டவராவார்.

# முல்லைத்தீவு மோதலில் 4 கடற்புலிகள் உயிரிழப்பு

கடந்த புதன்கிழமை முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்படையினருடன் இடம்பெற்ற மோதலில் நான்கு கடற்புலிகள் உயிரிழந்துள்ளனர் என்று புலிகளின்குரல் வானொலி தெரிவித்துள்ளது.

இம் மோதலில் உயிரிழந்தோர் விவரம்:-

★ கடற்கரும்புலி லெப்.கேணல் இரும்பொறை (சிவஞானம் சிவா ஜங்கரன் - பூநகரி நல்லூர்)

★ கடற்கரும்புலி கப்டன் சதாசிவம் (பிள்ளையார் திருச்செல்வம், மட்டக்களப்பு)

★ மேஜர் நிலவன் (சிவபாலசிங்கம் வேதகணேசன், யாழ்ப்பாணம்)

★ கப்டன் லக்சலா (கந்தையா விஜயநந்தினி, யாழ்ப்பாணம்.)(இ-5)

# கிராமவாசிகளின் வாக்குமூலங்களைப் பெற கல்விமான்கள் குழு பண்டாரவளை பயணம்

பேராதனை,நவ.6

பண்டாரவளைத் தடுப்பு முகாமில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவம் தொடர்பாக கிராமவாசிகளின் வாக்குமூலங்களைப் பெறுவதற்கென பல்கலைக்கழகக் கல்விமான்கள் அடங்கிய குழு ஒன்று கடந்த வெள்ளியன்று அங்கு விஜயம் செய்தது.

பேராதனை, கொழும்பு மற்றும் மொறட்டுவப் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த சிங்கள, தமிழ், முஸ்லீம் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.


தாக்குதலுக்கு இலக்கான முகாம பகுதியைப் பார்வையிட்ட இந்தக் குழுவினர் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வசிக்கும் சிங்கள, தமிழ் கிராமவாசிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கிராமவாசிகள் பலரும் மேற்படி படுகொலைச் சம்பவத்துக்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனவும் -

இனவாத சக்திகள் சில சீருடையினரின் அனுசரணையுடன் இந்தப் படுகொலைச் சம்பவத்திற்குக் காரணமாயிருந்துள்ளனர் எனத் தாம் சந்தேகிப்பதாகவும் - தெரிவித்தனர் என மேற்படி கல்விமான்கள் அடங்கிய குழுவில் இடம்பெற்ற பேராதனைப் பல்கலைக்கழகப் புவியியற்துறை முதுநிலை விரிவுரையாளர் பேராசிரியர் வி.நந்தகுமார் நேற்றுமுன்தினம் இரவு "உதயனுக்கு"த் தெரிவித்தார்.

தமது குழு பெற்ற வாக்குமூலங்கள் மற்றும் படுகொலை விவரங்கள் அடங்கிய அறிக்கை விரைவில் ஜனாதிபதிடம் சமர்ப்பிக்கப்படும் எனவும் பேராசிரியர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

★ **குறிப்பு:** இந்நிதிக்குப் பணம் சேகரிப்பதாகக் கூறி சில மோசடியாளர்கள் படிவங்களைத் தயாரித்து பொதுமக்களிடம் நன்கொடை கேட்டுச் செல்வதாக அறியவந்துள்ளது. இது விடயத்தில் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| | **04.11.2000 (சனிக்கிழமை) வரை கிடைத்த நிதி:-** | | ரூபா |
| | முன் கொண்டுவரப்பட்டது | - | 349,097 |
| 1. | அனுஷா | - | 350 |
| 2. | தெல்லிப்பழை யூனியன் கல்லூரி - 2000ம் ஆண்டு வர்த்தகப் பிரிவு மாணவர்கள் | - | 1,000 |
| 3. | ஓர் அன்பர் - வட்டுக்கோட்டை | - | 100 |
| 4. | கனகரத்தினம் அன்னபூரணம் - நீர்வேலி தெற்கு | - | 1,005 |
| 5. | டயானி இன்டன்ரீஸ் - சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் | - | 1,000 |
| 6. | ஓர் அன்பர் - வைமன் றோட் | - | 200 |
| 7. | யாழ்/வர்த்தகர் தொழிலாளர் கூட்டுச் சங்கம் - யாழ்ப்பாணம் | - | 5,150 |
| 8. | சு.சிவகுமாரன் - சாவகச்சேரி | - | 201 |
| 9. | முருகனடியார் - செல்வச்சந்நிதி | - | 101 |
| 10. | வாணி, செல்வி - வல்வெட்டித்துறை | - | 206 |
| 11. | அன்பர் - கோண்டாவில் கிழக்கு | - | 500 |
| 12. | எஸ்.கே.வேந்தன் - இணுவில் | - | 100 |
| 13. | ஒரு சகோதரி - கோப்பாய் | - | 100 |
| 14. | ஒரு சகோதரி - 83/1, பருத்தித்துறை வீதி, அனைப்பந்தி | - | 200 |
| 15. | செ.செல்வநாதன் - அரியாலை, யாழ்ப்பாணம் | - | 200 |
| 16. | அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள் - யாழ்/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் | - | 2,220 |
| 17. | எஸ்.ரி.பத்மநாதன் - அரியாலை | - | 1,000 |
| 18. | றோட்டறக்ட் கழகம் - யாழ். நகர்மையம் | - | 1,005 |
| 19. | ஓர் அன்பர் - யாழ்ப்பாணம் | | 250 |
| 20. | சிவஸ்ரீ நா.பாலசுப்பிரமணியம் குருக்கள் - சிவகுருநாதர் வீதி, நீராவியடி | - | 1,000 |
| | மொத்தம் | | 364,985 |

# தமிழர் தம் மீதான வன்முறைகளில் இருந்து இன்னும் விடுபடவில்லை

## மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கை

கொழும்பு,நவ.6

பண்டாரவளை படுகொலைச் சம்பவமானது தமிழர்கள் இன்னமும் தம் மீதான இன வன்முறைகளில் இருந்து விடுவிக்கப்படவில்லை என்பதையே தெளிவாகக் காட்டுகிறது.

இவ்வாறு மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவத்தில் இருந்து தப்பியவர்கள் மற்றும் பொலீஸார் போன்றவர்களுடன் நடத்திய விசாரணைகளின் அடிப்படையில் மனித உரிமைகள் ஆணைக் குழு 18 பக்கங்களைக் கொண்ட அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தச் சம்பவமானது புனர்வாழ்வு நிலையங்களது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான அவசரகாலச் சட்ட விதிகளை மறுபரிசீலனை செய்ய வேண்டிய தேவையை ஏற்படுத்தி உள்ளது.

புனர்வாழ்வு முகாமை தாக்க வந்தவர்களிடம் துப்பாக்கிகள் எதுவுமே இருக்கவில்லை. கத்திகள், பொல்லுகள், வாள்கள் மற்றும் கோடரிகளே இருந்தன. ஆனால் அங்கு காவல் கடமையில் ஈடுபட்டிருந்த 60க்கும் மேற்பட்ட பொலீஸாரிடமும் துப்பாக்கிகள் இருந்தன.

இதன் மூலம் தாக்குதலை நடத்த வந்த காடையர்களை இலகுவாகக் கட்டுப்படுத்தியிருக்க முடியும். அத்துடன் அவர்களை அங்கிருந்து துரத்தியிருக்கவும் முடியும்.

இத்தாக்குதலை நடத்திய காடையர் கோஷ்டிக்கு தலைமை வகித்தவர்களையாவது பொலீஸாரினால் பிடித்திருக்க முடியும். அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை.

தாக்குதலுக்கு காரணமானவர்களை கைதுசெய்யப் பொலீஸார் மேற்கொண்ட முயற்சிகள் கூட எவ்வித பலனையும் அளிக்கவில்லை என்றே படுகின்றது.

ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களைக் கொண்ட கோஷ்டியே இத்தாக்குதலை நடத்தியதாக சிலர் தெரிவித்த போதிலும் இந்தக் காடையர் கோஷ்டியில் எவ்வளவு பேர் அங்கம் வகித்தார்கள் என்பதை துல்லியமாகக் கூறமுடியாது.

இவர்கள் தாக்குதலை நடத்திய போது பொலீஸார் நடவடிக்கை எதுவும் எடுக்காதது நிலைமையை மேலும் மோசமாக்கியது.

இச்சம்பவமானது ஏற்கனவே திட்டமிடப்பட்டதும் தாக்குதல் நடத்தும் நோக்கில் பின்னணியில் இருந்து தூண்டி விடப்பட்டதும் ஆகும்.

அங்கிருந்த பொலீஸார் தங்கள் கடமையில் முற்றுமுழுதாக அலட்சியமாக இருந்தும் காடையர் கும்பலுக்கு நல்ல வாய்ப்பாக அமைந்துவிட்டது.

இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-5)

(இதன் சில பகுதிகள் ஏற்கனவே உதயனில் பிரசுரமாகியுள்ளன.)

## இரு வீரர்கள் பலியானதையடுத்து
## பலஸ்தீன அகதி முகாம்கள் மீது
# இஸ்ரேலியப் படைகள் தாக்குதல்!

காஸா, நவ. 6

ஜெருசலேத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் இரு இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதை அடுத்து அப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பலஸ்தீன அகதி முகாம்கள் மீது இஸ்ரேலியப் படைகள் தாக்குதல் நடத்தியுள்ளன.

ஜெருசலேத்தின் மேற்குப் பகுதியில் இரு தினங்களின் முன்னர் சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில் இரு இஸ்ரேலிய யூதர்கள் கொல்லப்பட்டனர். குண்டு வெடிப்புக்குப் பலஸ்தீனத் தீவிரவாத அமைப்பான இஸ்லாமி ஜிகாத் உரிமை கோரியிருந்தது.

இந்தச் சம்பவத்தையடுத்துப் பலஸ்தீன அகதி முகாம்கள் மீது இஸ்ரேலியப் படைகள் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டன. இதனால் ஏற்பட்ட விளைவுகள் குறித்துத் தகவல்கள் எதுவும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

இஸ்ரேலிய முன்னாள் பிரதமர் சிமோன்பெரிஸ், பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் இடையே எகிப்தில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின்போது இரு தரப்பும் போர் நிறுத்த அறிவிப்புகளை வெளியிடுவது, பலஸ்தீனப் பிரதேசங்களில் இருந்து இஸ்ரேலியப் படைகள் விலக்கிக்கொள்வது என்பவை உள்ளிட்ட முடிவுகள் எடுக்கப்பட்டு அவை நடைமுறைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் இந்த வேளையில் தற்போதைய சம்பவங்கள் அமைதி முயற்சிகளைச் சீர்குலைக்கும் எனக் கருதப்படுகிறது.

கடந்த செப்ரெம்பர் 28 ஆம் திகதி முதல் காஸா மற்றும் மேற்குக் கரைப் பகுதிகளில் இஸ்ரேலியப் படைகளுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையேயான மோதல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் உட்பட 170 பேர் இறந்துள்ளனர்.

இதேவேளை அமெரிக்க அதிபர் கிளின்ரன் பேச்சு நடத்த பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் மற்றும் இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக் ஆகியோரை அமெரிக்காவுக்கு அழைத்துள்ளார்.

(ஒ-8)

## அன்ரன் பாலசிங்கம் சந்திப்புக் குறித்து
# கூட்டணி கூட்டத்தில் விளக்கம்தர வை. கோவுக்கு வேண்டுகோள்!

சென்னை, நவ. 6

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசியது பற்றி ம. தி. மு. க பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி, தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அடுத்த கூட்டத்தில் விளக்கமளிக்கவேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் பங்காரு லக்ஷ்மன் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய போது கேட்டுக் கொண்டார்.

கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளுடன் ஆலோசனை நடத்திய பின்னரே இலங்கைப் பிரச்சினை தொடர்பான கொள்கை முடிவு செய்யப்பட்டது என்றும் லக்ஷ்மன் தெரிவித்தார்.

சமீபத்தில் ஐ. நா. பேரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ள அமெரிக்கா சென்றிருந்த வை. கோபாலசாமி நாடு திரும்பும் வழியில் லண்டன் சென்று அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசியது இந்தியாவில் கடும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

இந்தியாவில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவரை வை. கோபாலசாமி சந்தித்தது தவறு என்று எதிர்க் கட்சிகள் கூறி வருகின்றன.

(ஒ — 8)

## 6 ஆம் ஆண்டு நிறைவு நினைவஞ்சலி
### கணபதியின் தாள்சேர்ந்த கணேசன்



அமரர் அளவையூர்
வித்துவான், பண்டிதர்
**சி. நா. கணேசன்** (B.O.L)
கணநாதவாரிதி - சித்த வைத்திய கலாநிதி

பொன்போலும் மேனியது பொலிவும் என்றும்
பொலிவழியா இன்முறுவல் பூக்கும் வாயும்
என்புருகப் பாசத்தால் ஈர்க்கும் நெஞ்சும்
ஏற்றமார் கவித்துவமும் தமிழிற் பற்றும்
இன்றெங்கள் இடையில்லை அழவே வைத்தீர்
எங்களைவிட்டேகினீர் ஆறாண்டின் முன்னர்
கன்றுகள் தாய்ப் பசுவை நினைந் தரற்றல் போலக்
கணேசரே உமை நினைந் தரற்றுவோமே!

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
182, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(80236)

## ஓடு பாதை மாறிச் சென்றதே விமான விபத்துக்குக் காரணம்
### தாய்லாந்து அதிகாரிகள் தகவல்

தைபே, நவ. 6

தவறான ஓடு பாதையிலிருந்து மேலே கிளம்ப முயற்சித்ததாலேயே சிங்கப்பூர் ஏயார் லைன்ஸ் விமானம் விபத்துக்குள்ளாகியதாக தாய்லாந்து விமானச்சேவைப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

5 எல் என்று இலக்கமிடப்பட்ட ஓடு பாதையில் செல்வதற்குப் பதிலாக 5 ஆர் என இலக்கமிடப்பட்ட ஓடு பாதையில் இருந்து விமானம் கிளம்பியதாகவும் —

5 ஆர் ஓடு பாதையில் திருத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்ததாகவும் —

அங்கு பணியில் ஈடுபட்டிருந்த இயந்திரம் மீது விமானம் மோதியதாலேயே விபத்து ஏற்பட்டதாகவும் — அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விமானத்தின் கறுப்புப் பெட்டியிலிருந்து கிடைத்த தகவல்களைக் கொண்டு இவை தெரியவந்தன.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தாய்லாந்து சியாங்கைஷேக் விமான நிலையத்தில் இருந்து கிளம்பிய சிங்கப்பூர் விமானம் ஓடு பாதையில் இருந்து மேலெழுந்த சில வினாடிகளில் தரையில் மோதி நொறுங்கியதில் 81 பயணிகள் பலியாகியிருந்தனர்.

(ஒ-8)

# காஷ்மீரில் வெடிகுண்டு வெடித்து 4 பயிற்சிப் பொலீஸார் மரணம்!

ஜம்மு, நவ. 6

இந்தியக் கட்டுப்பாட்டுக் காஷ்மீரில், பொலீஸ் பயிற்சிப் பள்ளி வளாகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த வெடிகுண்டு ஒன்று வெடித்ததில் 4 பயிற்சிப் பொலீஸார் கொல்லப்பட்டதுடன் 25 பேர் படுகாயமடைந்தனர்.

பாரமுல்லா மாவட்டம் ஸ்ரீநகரில் உள்ள பொலீஸ் பயிற்சி பள்ளியின் விடுதியில் தீவிரவாதிகளால் குண்டு வைக்கப்பட்டிருந்ததாகவும்—

குண்டு வெடித்த சமயம் சுமார் 900 பேர் வரை விடுதியில் தங்கியிருந்ததாகவும்— அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பர்காம் மாவட்டத்தில் ஷிபா பிரிவுத் தலைவர் ஆகாஷ்சையத் மொஹிதீன் நிலக்கண்ணி வெடியில் சிக்கி உயிரிழந்த மறுநாள் இந்தக் குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது.

மொஹிதீன் நிலக் கண்ணியில் சிக்கிய சம்பவத்துக்கு லஸ்கர் - இ - தொய்பா அமைப்பு பொறுப்பேற்றுள்ள போதிலும் பொலீஸ் பயிற்சிப் பள்ளிக் குண்டு வெடிப்புக்கு எவரும் பொறுப்பேற்கவில்லை.

(ஒ-8)

## இந்தியாவுக்கு குழு

புதுடில்லி, நவ. 6

இந்தியாவின் மேற்கு வங்க மாநில எல்லையில் உள்ள அணையில் இருந்து தண்ணீரைத் திறந்து விட்டதாலேயே பங்களாதேஷில் பெரும் வெள்ளம் ஏற்பட்டதாக அந்த நாட்டு எதிர்க் கட்சிகள் கூறிவரும் முறைப்பாடு குறித்து ஆலோசனை நடத்த குழு ஒன்று இந்தியா வந்துள்ளது.

இக் குழுவில் பங்களாதேஷ் அரசின் மூத்த உறுப்பினர்களும், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இடம் பெற்றுள்ளனர். (ஒ-8)


## வந்து விட்டது!

இளைஞர் விரும்பும்
புதிய ரக சண்டெக்

WALKER — 160/-
KITO — 330/-

யாழ். நகரில்

**கணபதி நூ சென்ரர்**

69 A, நவீன சந்தை உட்புறம்
(ராசி சில்க் அருகில்)

திருநெல்வேலியில் மட்டும்

WALKER — 150/-
KITO — 319.90
D.S.I 5, 6, 7, 8, 9, 10 — 50/-

315C, பலாலி வீதி,
பரமேஸ்வராச்சந்தி,
திருநெல்வேலி.
(80230)


## திருட்டு பற்றிய அறிவித்தல்

எனக்குச் சொந்தமான கடையிலிருந்து 20 லீற்றர் எண்ணெய்கான்கள், சஸ்ரோஷன், நெஸ்கபே, கண்டேனாஸ், லேடிஸ்பைசிக்கிள், சீனி, ஒடிக்கொலோன், மீனரின், பவுடர் மற்றும் சகலவிதமான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன அவற்றைக் கொண்டுவந்து விற்பவர் பற்றிய தகவல்களை பொலீஸாருக்கோ அல்லது கடை உரிமையாளருக்கோ அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தகவல்கள் இரகசியமாக வைக்கப்படும்.

A, கனகரத்தினம்,
233/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(80233)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்
## இணுவில் எவறெஸ்ற் கல்வி நிலையம்

**தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில்** சித்தியெய்திய மாணவர்களையும் வெட்டுப்புள்ளியை அண்மித்த மாணவர்களையும் அவர்களுக்குச் சிறந்த முறையில் வழிகாட்டிய ஆசிரியர் திரு. அ. அருட்பிரகாசபிள்ளையையும் ஆசிரியைகள் செல்வி கு. பாரதி, செல்வி ம. சோபனா ஆகியோரையும் வாழ்த்துவதில் பெருமை அடைகின்றோம்.

| | மாணவர் பெயர் | | பெற்றபுள்ளி |
|---|---|---|---|
| 1. | ச. அனுசன் | — | 170 |
| 2. | இ. நிலானி | — | 161 |
| 3. | ஜெ. கஜானி | — | 158 |
| 4 | க. பாலகாந்தன் | — | 151 |
| 5. | பா. திருக்குமரன் | — | 149 |
| 6. | கு. கஜதீபன் | — | 144 |
| 7. | சி. வைஸ்ணவி | — | 143 |
| 8. | ச. ரூபதீசன் | — | 143 |
| 9. | த. நாரணி | — | 142 |
| 10. | ஜெ. பிரதாபன் | — | 138 |
| 11. | க. திவாஜினி | — | 138 |
| 12. | கு. சுகிர்தன் | — | 134 |
| 13. | கு. பாலிகா | — | 134 |
| 14. | கு. யகீந்தன் | — | 134 |

பெற்றோர் சார்பில் வாழ்த்துபவர்
நடராசா குணாளன்
பருத்தியான் பான்சி ஹவுஸ்
03, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.
(80180)

# இந்த வார இராசி பலன்

## 04-11-2000 - 10-11-2000

| | | | |
|---|---|---|---|
| | சனி | வியா | ரா |
| | இராசிச் சக்கரம் | | |
| | | | |
| கே | வெ | சூ ▼ | செ புத |

மாற்றம்:

4 — 11 — 2000 இல் திருவோணம் நட்சத்திரம் — மகரம் இராசியில் சந்திரன் நிற்கும்.

4 — 11 — 2000 இல் புதன் - துலாம் இராசியில் மாறும்.

9 — 11 — 2000 இல் வெள்ளி-தனுசு இராசியில் மாறும்.

சத்தங்களும் கேட்கும்; சமாதானப் பேச்சுக்களும் ஏற்படும். இந்தியா அக்கறை கொள்ளும். மக்கள் இடத்திற்கு இடம் இடம் பெயர்ந்து துன்பநிலை அடைய நேரிடலாம். அரசு தகுந்த நடவடிக்கைகளை கண்டிப்பாக எடுத்தபடி இருக்கும் இந்தியாவின் வடக்கே யுத்தமேகம் கருக்கூடும். மத்திய கிழக்கில் நெருக்கடி அதிகரிக்கும். மேற்கு நாடுகள் புதிய நடவடிக்கைகள் எடுக்கும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

ஆத்திரத்தால் சிலர் செய்யக்கூடாத செயல்களைச் செய்துவிட்டு வருந்துவார்கள். எனவே நிதானமாக நடந்து தொழில் ஸ்தானத்தில் பொறுப்புடன் இருப்பதனால்தான் நன்மைகளை, இலாபங்களை நீங்கள் அடைய முடியும். அல்லது பல எதிர்ப்புக்களைச் சந்திக்க வேண்டி வரும். காணி பூமி சம்பந்தமான அலுவலுக்காக ஓடியாடித்திரிவீர்கள். எதிர்பாராரின் எதிர்ப்புக்கள் ஏற்பட இடமுண்டு. சளி, தலைப்பாரம், வயிற்றுநோ, கை கால் தாக்கம் என்பன ஏற்பட இடமுண்டு. திடீர்க் கோபதாபம், விசாரணைகள் சிலருக்கு ஏற்படலாம். எனவே சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்து வரவும். கமிஷன்துறை, பாதுகாப்புத்துறை, வியாபாரத்துறை, ஹோட்டல்துறை, சந்தைத்துறை, போன்றவர்கள் இலாபம் அடைவார்கள். பொன்னாங்காணி, வெந்தயம் சாப்பாட்டில் சேர்த்து வாருங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன், வெள்ளி.

**மகாதேவா ஜோதிடம்**

### இடபம்

பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. என ஏன் சொல்லுகின்றீர்கள்? காற்று வந்துதானே கொடி அசைய வேண்டும். எனவே தொழில்ஸ்தானத்தில் கவனமாக, பொறுமையாக, மௌனமாக இருந்து கருமமாற்றுங்கள். அபிப்பிராய பேதங்கள் வர இடமுண்டு. குடும்பத்தினரின் அலுவல்களுக்காக காலநேரத்தைச் செலவு செய்வீர்கள். பொருள் வரவுகள் ஏற்படும். தூரத்துச் செய்திகளால் மனநிறைவு ஏற்படும். நெஞ்சுநோ, சலவருத்தம், தொண்டை வருத்தம், மூல வருத்தம் என வருத்தலாம். கீரைவகை, வல்லாரை, தேசிக்காய்நீர் போன்றவற்றைப் பாவித்து வாருங்கள். போக்குவரத்துத் துறை, ரீவித்துறை, இசைத்துறை, புடைவை, நகைவேலைகள், ஹோட்டல், வங்கித் துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன், வெள்ளி.

### மிதுனம்

அவசரத்தில் பல பிழைகள், தவறுகள் நடப்பதால்தான் திரும்பத் திரும்ப வேதனைகள் மலிகின்றன. எமது பிழைகளைத் திருத்தி வாழப் பழக வேண்டும். மற்றவர்களைப்பற்றி கண்டபடி குறைகளைச் சொல்லக் கூடாது. தொழில் ஸ்தானத்தில் பதற்ற நிலையை உருவாக்காது அமைதியாக இருக்க முயலுங்கள். அல்லது பழிகள் வந்து சேரும் நிலை ஏற்படும். சிலருக்குப் பிரயாண வசதிகள் வந்துசேரும். புதிய காற்று வாழ்வில் வசந்தம் தந்துவிட இடமுண்டு. காணி பூமி என ஒரு சிந்தை வந்து போகும். மலச்சிக்கல், உரசல் காயங்கள், களைப்பு என்பன வருத்தலாம். கீரைவகை, பால், புறோட்டீன் சத்துக்களைச் சேர்த்துக் கொள்ளவும். விஞ்ஞானத்துறை, ஆசிரியத்துறை, எழுத்து, பத்திரிகைத்துறை போன்ற தொடர்பானவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன்.

### கடகம்

வளர்பிறை, தேய்பிறை காலமாக எமது வயது போய்க்கொண்டிருக்கின்றது. நாம் என்னத்தைச் சாதித்துக் கொள்ளுகின்றோம் என எத்தனை பேர் சிந்திக்கிறார்கள்? தொழில் ஸ்தானத்தில் உங்களுக்கு மறைமுக எதிர்ப்புக்கள் வந்து கொண்டிருக்கும். வருவாய்கள் வர நீங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும், 'சாணேற முழம் சறுக்கும்' கதை போலத்தான் முடியும். ஆயினும் தொடர்ந்து போய்க் கொண்டிருங்கள். எதிர்ப்பாலாருடன் நிதானமாகக் கதையுக்கள். சகோதரர்களின் உதவிகளால் நன்மைகள் அதிகரிக்கும். அயலவர்கள் கேலி செய்ய இடமுண்டு. பொறுமையாக இருக்கவும். வயிற்றுவருத்தங்கள், சலவருத்தங்கள், கைகால் பிடிப்பு, சளித்தொல்லைகள் என்பன ஏற்பட இடமுண்டு. கீரைவகை, பால், பயறு வகைகளைச் சேர்த்துக் கொள்ளவும். போக்குவரத்துத்துறை, ஹோட்டல்துறை, குருத்துறை போன்றவர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன், வியாழன்.

### சிங்கம்

உங்களுக்கு குற்றம் — துரோகம் செய்துவருபவர்கள் என்றோ ஒருநாள் பிடிபட்டோ, தண்டனையோ அடைந்துதான் தீருவார்கள். நீங்கள் மட்டும் சலிக்காமல் உண்மைக்காகப் போராடியபடி இருங்கள் அதிலே நிச்சயம் வெற்றி அடைவீர்கள் தர்மம் தலை காக்கும். கோயில்துறையில் நாட்டமிருக்கும். உங்கள் தொழில் ஸ்தானத்தில் தொடர்ந்து முன்னேறியபடி இருப்பீர்கள். சிலருக்கு மறைமுக அழுத்தங்கள் இருந்தபடி இருக்கும். தூரத்துச் செய்திகளால் ஓரளவு அமைதி ஏற்படும் கொடுக்கல்வாங்கலில் நிதானமாக இருக்கவும் குறை கேட்க நேரிடலாம். உஷ்ணபீடைகள், பிடிப்புக்கள், சளித்தொல்லைகள், சலவருத்தம், நெஞ்சுநோ என்பனவரலாம் கீரைவகை, பால், பருப்பு வகை நல்லது பிரயாணத்துறை, மருந்துத்துறை, ஆசிரியத்துறை, பாதுகாப்புத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்;- புதன், வியாழன்.

### கன்னி

கலிகாலத்தில் தெய்வீகம் உள்ளவர்கள் ஒரு பக்கமும் அசுரகுணம் உள்ளவர்கள் மறுபக்கமும் ஒதுங்கி நின்று கத்திக் கொண்டு இருப்பார்கள். எமது மண்ணில் இப்பொழுது நடக்கும் சூரன் போரே இதற்குச் சாட்சியாகும். இதையெல்லாம் பெரிதாக எண்ணாதீர்கள். காலம் காலமாக இந்தக் காட்சிகள் உலகெங்கும் விட்டு விட்டு நடந்து கொண்டுதான் இருக்கின்றன. எனவே தொழில் ஸ்தானத்தில் நிதானமாக இருந்து செயற்பட்டுவாருங்கள். சகோதரங்களுக்கு உடல் நலப் பாதிப்பு வர இடமுண்டு. வைத்தியம் செய்துவரவும் சுகம் வரும் மூட்டு உளைவு, இருமித்தாக்கம், மூலவருத்தம், சளி என்பன கொடுக்க இடமுண்டு. கொதித்து ஆறிய நீரைக்குடியுங்கள். நோய்க் காவிகளான இலையான், கொசு, நுளம்புகளில் கவனமாக இருங்கள். வெந்தயம், முட்டை, பால் வகைகளை உணவுடன் சேர்த்துக் கொள்ளுங்கள். செய்தித்துறை, குருத்துறை வியாபாரத்துறையினர் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.

### துலாம்

சட்டத்தாலோ பட்டத்தாலோ மனச்சாட்சியை எடைபோட முடியுமா? விட்டுக்கொடுக்கும் மனம் இருந்தால் எல்லா விஷயமும் சுலபமாக முடியாதா? தொழில் ஸ்தானத்தில் துலக்கமான காலமாகும். சம நீதியுடன் நடந்து வரும் உங்களைச் சிலர் அறியாது தூற்றுவார்கள். அவர்களைப் பற்றி அதிகம் யோசிக்காதீர்கள் உழைப்பால் உயர்ந்து உன்னத நிலைக்கு வந்து கொண்டிருப்பீர்கள். வீட்டில் கருத்து வேற்றுமை வரும் சகோதரமொன்றால் அதிக யோசனைகள் வரும் காலமாகும். வயிற்று வருத்தம், தோல்கட்டிகள், நரம்பு, சலவருத்தம் என்பன வரலாம். இலைக்கறி வகை, பால், பருப்பு வகை நல்லது. மருந்துத்துறை, மின்சாரத்துறை, நகைத்துறை, இரசாயனத்துறை, விவசாயத்துறை போன்றவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.

### விருச்சிகம்

உறவு பாசமெல்லாம் கோட்டில் ஏறு மட்டும். போர்க்களம் ஏறிவிட்டால் போராடி முடிவு காணும் மட்டும் போராடாமல் விடமுடியாதல்லவா? எனவே எதற்கும் தயார் நிலையில் உங்களைத் தயார்ப்படுத்துங்கள். உதவி தேடி அடைக்கலம் கேட்டு வந்தவர்கள் உபத்திரவத்தைக் கொடுக்கின்றார்களே என எண்ணுகிறீர்கள். மனிதர்கள் எல்லோரும் ஒரே மனோ நிலையில் இல்லை. எனவே தொழில்ஸ்தானத்தில் உறுதியான நிலையில் இருங்கள். படிப்படியான மாற்றங்கள் கொடுக்கும். அரச உதவிகள் கொடுக்கும் காலமாகும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கண் கோளாறு, வயிற்றுப்போக்கு, தொண்டை, நாரிநோ, இருமித்தாக்கம், முதுகு விறைப்பு என்பன வர இடமுண்டு. நகைத்துறை, புடைவை வியாபாரம், பலசரக்கு வியாபாரம், மருந்து, குருத்துறை, தொழில்நுட்பத்துறை போன்ற துறைகளில் சம்பந்தப்பட்டவர்களுக்கு மாற்றங்களும் இலாபங்களும் கிடைக்க இடமுண்டு

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.

### தனுசு

வரவு எட்டணா செலவு பத்தணாவாக உங்களுக்கு இருக்கும். எனவே தொழில் ஸ்தானத்தில் மனக்கருத்துக்கள் எதிர்ப்பான சம்பவங்கள் நடக்க இடமுண்டு. கட்டு மீறிய செலவுகளால் குடும்பத்தினருடன் வாக்குவாதப்பட நேரிடும். தொழிலில் ஊக்கத்தைப் பொறுத்து மாற்றங்கள் கொடுக்கும். எதிர்ப்பாலாருடன் வாக்குவாதப்படாமல் பார்த்துக் கொள்ளவும். இடுப்புநோ, வயிற்றுவருத்தம், வயிற்றுப்போக்கு, குடல் வருத்தம், தலைப்பாரம் என்பன வர இடமுண்டு. வாகனச் செலவுகள் அதிகரிக்கும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். போக்குவரத்துத்துறை, செய்தித்துறை, இசைத்துறை, ஆசிரியத்துறை தொடர்பானவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்க இடமுண்டு. கீரை வகை, பால், பருப்பு வகைகளைச் சாப்பாட்டில் சேர்த்தால் நன்று.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன், வியாழன், வெள்ளி.

### மகரம்

வெண்ணிலாவில் பறந்து போகும் எண்ணம் உங்களுக்கு. எதற்கும் ஓர் அளவு உண்டு. நிதானமாகச் செயற்பட்டபடி இருந்து வாருங்கள். தொழில்ஸ்தானத்தில் பலரின் பகைமை எதிர்பாராமல் இருக்கும். எனவே வருமானத்தில் சிந்தனையாக இருந்து செயற்படுங்கள். பொருள் முடக்கம், வாகனச் செலவுகள் அதிகரித்தபடி இருக்கும். நண்பர்களை நம்பாதீர்கள். கூட இருந்தே குழிபறித்துக் கொண்டிருப்பார்கள். மூட்டு வருத்தம், தோல் நோய், மனக்குழப்பம், நாரிப்பிடிப்பு, சளித்தொல்லை என்பன வரலாம். துளசி இலை, தூதுவளைச்சம்பல் முருக்கங்காய், பருப்புவகைகளை உணவில் சேர்த்துவாருங்கள். பாதுகாப்புத்துறை, கமிஷன், எண்ணெய்த்துறை, ஹோட்டல் துறை, கொம்பியூட்டர் துறை, வியாபாரத்துறை, தபால்துறை, செய்தித் துறை தொடர்பானவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், வியாழன், வெள்ளி.

### கும்பம்

கருத்துடன் எதைச் செய்தாலும் கலகமே ஆகின்றதே என அடிக்கடி சிந்தித்தபடி இருப்பீர்கள். நீங்கள் நிறைகுடம் போன்றவர்கள். எதையும் தொழில்ஸ்தானத்தில் தாங்கிக் கொள்ளுங்கள். தகுதிக்கு முதலிடம் கொடுங்கள். செயற்றிறனற்று, வாயால் எதையும் சாதிக்கலாம் என எண்ணும் ஒருசிலரால் எத்தனை வேதனைப்பட வேண்டி இருக்கின்றதென எண்ணும் அனுபவம் உங்களுக்கு ஏற்பட இடமுண்டு. குடும்பத்தின் செலவுகள் அதிகரித்தபடி இருக்கும். இடமாற்றங்கள் ஏற்படலாம் முதுகு நோ, முழங்கால் பிடிப்பு, நரம்புப்பிடிப்பு சளி, தலைப்பாரம் என்பன வர இடமுண்டு. தூதுவளைச் சம்பல், குறிஞ்சாச் சம்பல், வேர்க்கம்பு, இஞ்சி பாவிக்கவும். முடக்கொத்தான் இரசம் நல்லது. குருத்துறை, விஞ்ஞானத்துறை, மருந்துத்துறை, ஹோட்டல்துறை, நகைத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், வியாழன்.

### மீனம்

எந்த விஷயத்திலும் கலகம் பிறந்துதான் நியாயம் பிறக்கின்றது. காலம் - காலமாக நீதிக்குச் சோதனை வந்து கொண்டிருந்ததாகத் தான் சரித்திர ஏடுகள் சொல்கின்றன. எனவே தொடர் நிலையில் உங்கள் தொழில் நிலையில் முன்னேற்றப் படிகளைக் கடந்து கொண்டு இருங்கள். காணிபூமி-வீடு சம்பந்தப்பட்ட இடங்களில் மாற்றங்கள் ஏற்பட இடமுண்டு. எதிர்ப்பாலாரை அனுசரித்து நடவுங்கள், இடமாற்றங்களைத் தவிர்ப்பது நன்று. அல்லது இழப்புகள் வரலாம். இடுப்பு நோ, சளி வருத்தம். குடல், சமியாக்குணம் கை கால் விறைப்பு என்பன ஏற்பட இடமுண்டு. கடல்துறை எழுத்துத்துறை, பிரயாணத்துறை, பாதுகாப்புத்துறை, வியாபாரத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்க இடமுண்டு.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், வியாழன்


**நெஞ்சம் சுமக்கும்**
**4 ஆம் ஆண்டு நினைவலைகள்**



பிறப்பு 07 — 11 — 1940

இறப்பு 06 — 11 — 1996

**அமரர் வேலுப்பிள்ளை திரவியம் ஜோஜ்**

''சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்''.

வே. துரைரத்தினம் (சகோதரன்)
பாடசாலை வீதி,
ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. (80227)

# கண்ணீர் அஞ்சலி

திருமதி

## சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை

யா/ கரவெட்டி ஸ்ரீ நாரதா வித்தியாலய

அதிபர் K. A. கந்தசாமி

அவர்களின் அன்பு மாமியார் 4.11.2000 அன்று இறைபதம் அடைந்ததை ஒட்டி கவலையுற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா / கரவெட்டி ஸ்ரீ நாரதா வித்தியாலய
ஆசிரியர்கள், மாணவர்கள்.

கரவெட்டி. (80231)

# முத்திரையிடல்

சண்டிலிப்பாய், நவ. 6

நிறுவைகள், அளவைகள் உபகரணங்களுக்கு முத்திரையிடும்பணி மானிப்பாயிலுள்ள வலி. தென்மேற்குப் பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் நாளையும் 7 ஆம், 10 ஆம், 13 ஆம், 14 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளது.

இத்தினங்களில் காலை 9 மணி முதல் நண்பகல் 1. 30 மணிவரை சகல வர்த்தகர்களும் தங்கள் நிறுவை, அளவை உபகரணங்களுக்கு தவறாது முத்திரையிட்டுக் கொள்ளுமாறு யாழ். அரசாங்க செயலக நிறுவைகள், அளவைகள் பகுதிப் பொறுப்பதிகாரி கா. நாகலிங்கம் அறிவித்துள்ளார். (ஐ-135)

## வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை, கரவெட்டி

# கேள்வி அறிவித்தல்-2001

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக் கடைகள், சந்தைகள், துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் என்பவற்றை 2001 ஆம் ஆண்டு தை மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2001 ஆம் ஆண்டு மார்கழி 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 17-11-2000 முற்பகல் 10. 30 மணிவரை வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையின் நெல்லியடியிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு முற்பகல் 10. 45 மணிக்குத் திறந்து பரிசீலனை செய்யப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ சமுகமளிக்கலாம். கேள்விப் படிவத்தின் இணைப் பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்கட்குப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

கேள்விப் பத்திரங்களை உரிய கட்டணங்களைச் செலுத்துவதன் பேரில் அவ்வவ் உப அலுவலகப் பொறுப்பதிகாரிகளிடமிருந்து 16-11-2000 ஆந் திகதி நண்பகல் 12. 30 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும். கேள்விகள் தொடர்பான மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் உப அலுவலகங்களில் அல்லது தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் பார்க்கக் குறைவான கேள்விகள் சமர்ப்பிப்பவர்களின் கேள்வி வைப்புப் பணம் பறிமுதல் செய்யப்படும்

| சந்தைகள், இறைச்சிக்கடைகள் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| **நெல்லியடி உப அலுவலகம்** | | | |
| 01. மீன்சந்தை — நெல்லியடி | 150/- | 1,000/- | 88,000/- |
| 02. மரக்கறிச் சந்தை — நெல்லியடி | 1,000/- | 20,000/- | 12,30,000/- |
| 03. கோயிற் சந்தை | 150/- | 3,000/- | 42,800/- |
| 04. கொட்டடிச் சந்தை | 100/- | 500/- | 3,000/- |
| 05. துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் நெல்லியடி | 150/- | 1,000/- | 47,000/- |
| 06. நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை இல. 01 | 100/- | 500/- | 18,0000/- |
| 07. நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை இல. 02 | 100/- | 500/- | 20,000/- |
| 08. நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை இல 03 | 100/- | 500/- | 16,500/- |
| 09. நெல்லியடி மாட்டிறைச்சிக் கடை இல. 02 | 150/- | 3,000/- | 220,000/- |
| 10. நெல்லியடி மாட்டிறைச்சிக் கடை இல. 03 | 150/- | 3,000/- | 220,000/- |
| 11. கோயிற் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 150/- | 500/- | 16,000/- |
| 12. கொட்டடிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 500/- | 5,000/- |
| 13. கோயிற் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 100/- | 1,000/- | 33,000/- |
| **உடுப்பிட்டி உப அலுவலகம்** | | | |
| 14. உடுப்பிட்டிச் சந்தை | 500/- | 5,000/- | 346,000/- |
| 15 அந்திரான் சந்தை | 150/- | 500/- | 30,000/- |
| 16. நவிண்டில் சந்தை | 100/- | 500/- | 12,000/- |
| 17. உடுப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 150/- | 2,000/- | 220,000/- |
| 18. உடுப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 500/- | 7,700/- |
| 19. அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 100/- | 500/- | 63,000/- |
| 20. உடுப்பிட்டி துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 100/- | 500/- | 47,000/- |
| **கட்டைவேலி உப அலுவலகம்** | | | |
| 21. துன்னாலை வடக்கு சந்தை | 100/- | 500/- | 1,800/- |
| 22. துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 500/- | 21,000/- |
| 23. அல்வாய் தெற்கு சந்தை மாட்டிறைச்சிக் கடை | 100/- | 500/- | 26,500/- |

வ. நடராசா ஜே. பி.
தலைவர்,
வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபை,
கரவெட்டி.

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை,
கரவெட்டி.
02—11—2000 (சி/13700)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி கமலாதேவி பரம்சோதி

தோற்றம் 29 — 11 — 1937 மறைவு 02 — 11 — 1995

திதி: 6 - 11 - 2000

உங்கள் ஆன்மா உய்திபெற கூற்றுயிர் குடித்த நோன்றாட் பண்ணவன் தன்னைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சத்திரவளவு,
துன்னாலை தெற்கு, கரவெட்டி. (80155)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுப்பையா அன்னலெட்சுமி

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் மல்லாவியை வசிப்பிடமாவும் கொண்ட திருமதி சுப்பையா அன்னலெட்சுமி 25 - 07 - 2000 அன்று மல்லாவியில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற வைத்தியர் கணபதிப்பிள்ளை சின்னத்துரை-பூரணம் தம்பதிகளின் மூத்த மகளும், பொன்னையா சுப்பையாவின் அன்பு மனைவியும், பாலேந்திரன், பவானி, பாமினி, பாலேஸ்வரன், பாலினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், குகனேசன் (குகன் போட்டோ, நல்லூர்), சிவலோகநாதன் (வான்மதி நகைமாடம், புதுக்குடியிருப்பு), நாகலெட்சுமி செல்வரெத்தினம், காலஞ்சென்ற சத்தியசீலன், தியாகரதி (திருகோணமலை), சிவநேசன், இரத்தினேஸ்வரன் (கிராம அலுவலர், அல்லைப்பிட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், புவனேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), கமலாம்பிகை, செல்வரெத்தினம், நித்தியலெட்சுமி, மோகனாம்பிகை, சாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தாயாரும்,
சகோதரங்களும்.

சு. சிவநேசன்,
3ஆம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி. (89225)

## திருமதி விசாலாட்சி பரராஜசிங்கம்

ஒட்டுமடத்தில் வசித்து வந்த விசாலாட்சி பரராஜசிங்கம் அவர்கள்04-11-2000 அன்றுசிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டர் பராஜசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்), அவர்களின் பாரியாரும் ப. ஸ்ரீபாலசந்திரன் (சச்சி - எழுதுநர், யாழ். ப நோ.கூ. சங்கம்), காலஞ்சென்ற ப. ஸ்ரீபாலசண்முகம், ப. ஸ்ரீபாலகிருஷ்ணன் (அண்ணாமலை – யா/ ப.நோ.கூ. சங்கம் கிளை இல. 4இன் தலைவர்), ஆகியோரின் அன்புத் தாயாரும் கனகேஸ்வரி, சந்திரபாலதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஸ்ரீதாட்சாயணி (ஆசிரியை, யா/ புன்னாலைக் கட்டுவன் அ.த.க. பாடசாலை), ஸ்ரீதாரணி (யா/ இந்து மகளிர் கல்லூரி)ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(06-11-2000) திங்கட்கிழமை 11.00மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ப. ஸ்ரீபாலகிருஷ்ணன் (அண்ணாமலை),
ப. ஸ்ரீபாலசந்திரன் (சச்சி) பிள்ளைகள்.

பவளவாசம்,
573, மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (80228)

# உதயன்

## ஆண்டியின் தோண்டியாகலாகாது

ஆசிரியர்களின் இடமாற்றம் சம்பந்தமான நடவடிக்கைகளைக் கவனிக்கவென மத்திய இடமாற்றச்சபை அமைக்கப்படும் என்று புதிய கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த் தெரிவித்திருக்கிறார்.

ஆசிரியர் இடமாற்றம் ஆசிரியர்களுடன் மட்டும் சம்பந்தப்பட்ட ஒன்றல்ல. மாணவர்களுடனும் அதன் நிமித்தம் பெற்றோர்களுடனும் தொடர்புடையது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியனவும் தத்தமது பாடசாலை நலன்கருதி ஆசிரியர் இடமாற்றங்களில் அக்கறை உடையனவே.

இந்நாட்டின் கல்வி நிர்வாக முறைகள், முகாமைத்துவ முறைகள் பல மாற்றங்களைக் கண்டுவிட்ட போதிலும், ஆசிரியர் இடமாற்றம் இலகுவானதாக, துப்புரவானதாக்கப்படவில்லை. பல வகைச் சிக்கல்களும் குளறுபடிகளும் நிறைந்ததாகவே தொடர்கிறது. ஆசிரியர் இடமாற்றத்துக்கென அவ்வப்போது பல திட்டங்கள் வகுக்கப்பட்ட போதிலும்; நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் இன்னும் அதன் குறைபாடுகள் நிமிர்த்தப்படவில்லை.

அரசியல் மட்டத் தலையீடு, அதிகாரிகள் மட்டச் செல்வாக்கு, நிர்வாக ஊழல்கள் என்பன ஆசிரியர் இடமாற்றத்தை எப்போதுமே பிரச்சினைக்குரியதாகவும் சிக்கல் நிறைந்ததாகவும் நிறுத்தி வைத்துள்ளன.

ஆசிரிய இடமாற்றங்கள் இப்போது மாகாணக் கல்வி அமைச்சுகளினாலும், மாவட்டக் கல்வி நிர்வாகிகளினாலும் கையாளப்படுகின்றன.

ஆசிரியர் இடமாற்றத்தில் இரண்டு முக்கிய அம்சங்கள் அடிப்படையானவை. மாணவர்களின் கல்வி நலன் ஒன்று. ஆசிரியர்களின் (வசதிகள், சௌகரியங்கள் ஆகிய) நலன் மற்றையது. இவை இரண்டிலும் மாணவர் கல்வி நலனே முதன்மை பெற வேண்டியது. அதனால் ஆசிரியர்களின் நலன்கள் புறக்கணிக்கப்பட வேண்டும் என்பதல்ல.

இந்த இரண்டு முக்கிய தேவைகளையும் ஒருங்கிணைத்து நிறைவேற்றும் நோக்குடன் ஆசிரியர்கள் இடமாற்றத்துக்கென இறுக்கமான பல வரன்முறைகளும் படிமுறைகளும் அடங்கிய திட்டங்கள் பலவும் வகுக்கப்பட்டதுண்டு

ஆனால் அந்தத் திட்டங்கள் பல வகைத் தலையீடுகள், சுவலாப ஏற்பாடுகளினால் தோல்வி கண்டன. அதனால் மாணவர் நலன்கள் புறக்கணிக்கப்பட்டதும் உண்டு; ஆசிரியர்களின் நலன்கள் கவனிக்கப்படாமல் போனதும் உண்டு.

இந்த இரண்டில் ஒரு காரணத்தை முன்னிறுத்தி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை நலன் விரும்பிகள் என்று பல தரப்பினரும் பாதிப்புக்குட்பட்டதும் மோதுப்பட்டதும் செய்திகளாகின. அதனால் கல்வி வளர்ச்சிக்கு முந்தகம் ஏற்படுத்தப் பட்டுப் பல பின்னடைவுகள் தோன்றியதை மறக்கலாகாது.

ஆகையால் —

புதிய கல்வி அமைச்சரின் சிந்தனையில் உதித்துள்ள மத்திய இடமாற்றச்சபை, நந்த வனத்து ஆண்டியின் தோண்டியாக மாறி மாணவரின் கல்வி வளர்ச்சியைப் போட்டு உடைப்பதாக இல்லாமல் அமைய வேண்டும்.

ஆசிரியர் இடமாற்றத்தை ஒரு நிறைகுடமாக மாற்றும் வல்லமை புதிய கல்வி அமைச்சருக்கு இருக்குமாயின் அது நாட்டின் கல்விப் புலத்தில் அவர் ஈட்டும் பெரும் சாதனையாக அமையும்!

# கோட்டை ஜனாதிபதி மாளிகைக்கு சந்திரிகா இன்று இடம் மாறுகிறார்

கொழும்பு, நவ. 6

கொள்ளுப்பிட்டியில் உள்ள அலரிமாளிகையில் இதுவரை தங்கியிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகைக்குச் செல்கின்றார்.

1994 ஆம் ஆண்டு பிரதமராகப் பதவி ஏற்ற சமயம் அலரிமாளிகையில் குடியேறிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பின்னர் ஜனாதிபதியான பின்பும் அங்கேயே தங்கியிருந்தார்.

அவரது தாயார் பின்னர் பிரதமரானார். இதனால் சந்திரிகா தொடர்ந்து அலரிமாளிகையிலேயே தங்கமுடிந்தது.

பிரதமர் பதவியேற்றுள்ள ரத்னசிறி விக்கிரமநாயக்கா தங்குவதற்கு அலரிமாளிகையை வழங்கவேண்டியுள்ளதாலேயே ஜனாதிபதி மாளிகைக்கு சந்திரிகா செல்கின்றார்.

ஜனாதிபதி இன்று காலை அங்குசெல்வதால் விசேட வைபவம் ஒன்றை நடத்தி இன்று பிரதமர் அலரிமாளிகையில் குடியேறுகின்றார். (இ-3)

# வாய்க்காலைப் புனரமைக்குமாறு சமூக சுற்றாடல் சபை கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 6

சங்குவேலி கேலங்காமம் குளத்துடன் தொடர்புடைய கட்டுடைப் பகுதி ஊடாகச் செல்லும் 200 அடி நீளமான வாய்க்காலைப் புனரமைப்புச் செய்வதுடன் அப்பகுதி மக்களுடைய நலன் கருதி கனரக வாகனங்கள் செல்லக்கூடியதான பாலம் ஒன்றையும் அமைத்துத் தருமாறு மானிப்பாய் சுகாதார சமூக, சுற்றாடல் விவகார சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்படி சபையின் ஆளுநர் சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைய அதன் தலைவர் சட்டத்தரணி இரா. வசந்தசேனை, நீர்ப்பாசன திணைக்களத்திடமும் மானிப்பாய் பிரதேச சபை, வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகம் ஆகியவற்றிடமும் மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளார்.

சுதுமலை அம்மன் கோயிலடியில் இருந்து மானிப்பாய் மருதடிக் குளம் வரை செல்லும் கொத்தலாவல வாய்க்காலையும் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ 152)

# கருத்தரங்கு

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் ஜி. சி. ஈ. உயர்தர வகுப்பு மாணவிகளுக்கான கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11-30 மணிக்கு மேற்படி கல்லூரி தற்போது இயங்கிவரும் கரவெட்டி ரலன்ற் கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. (ஐ ஒ)

# நிவாரணப் பொருள்களில் கழிப்பு; ப. நோ. கூ சங்கத் தலைவர் விளக்கம்

யாழ்ப்பாணம், நவ. 6

இடம்பெயர்ந்தோருக்கு வழங்கப்படும் நிவாரணங்களில் எவ்வித குறைப்பையோ, வெட்டையோ சங்கம் மேற்கொள்ளவில்லை.

இவ் வருடம் மே மாதம் ஏற்பட்ட இக்கட்டான சூழ்நிலையின்போது 869 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட பொருள்களுக்குப் பெறுமதியான பொருள்களே ஜூன், ஜூலை மாதங்களில் கழிக்கப்பட்டன.

"மே மாத நிவாரணத்துக்காக ஜூலைக்குரிய பொருள்களில் வெட்டு" என்ற தலைப்பில் 27-7-2000 ஆம் திகதிய உதயனில் (2ஆம் பக்கத்தில்) வெளியான செய்தி குறித்துப் பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கத்தின் தலைவர் 18-09-2000 திகதியிட்டு அனுப்பியிருந்த விளக்கத்தில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அவரது விளக்கம் வருமாறு:

27—03—2000 திகதியன்று பளைப் பகுதியில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களால் அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் கூடுதலாக வரணிப் பகுதியில் பாடசாலைகளிலும், வீடுகளிலும் தங்கியிருந்தனர். அக்காலப் பகுதியில் 10-05-2000 திகதியில் சாவகச்சேரிப் பகுதியில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களால் யாழ்ப்பாணம் கண்டி வீதி முற்றாகத் துண்டிக்கப்பட்டு 24—05—2000 திகதி வரை யாழ். செயலக தொடர்புகள் முற்றாகத் தடைப்பட்டிருந்தன.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் பச்சிலைப்பள்ளிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் தங்கியிருந்த மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கி இருந்தனர். இக்கட்டத்தில் சாவகச்சேரிப் பிரதேச செயலர் அவர்கள் குடும்பத்தினருடன் கால்நடையாக இடம்பெயர்ந்து சாவகச்சேரியில் இருந்து வரணிக்கு வந்து கொண்டிருந்த போது, பட்டினிச் சாவை எதிர்நோக்கியிருந்த மக்கள் தங்கள் பரிதாப நிலையை பிரதேச செயலர் அவர்களுக்கு எடுத்துக் கூறி தங்களை பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்றுமாறு கேட்டுக் கொண்டதற்கு அமைய எமது பொது முகாமையாளரை அழைத்து சங்கத்தில் இருக்கும் உலர் உணவுப் பொருள்களை வழங்குமாறும் இதற்கு ஈடாக மாற்று ஒழுங்குகள் செய்து தரப்படும் எனவும் உறுதி அளித்தார். அதன் பிரகாரம் பட்டியல் தயாரிக்கப்பட்டு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு அன்றைய கால பட்டினி நிலை நீக்கப்பட்டது.

இக்கட்டத்தில் இடம்பெயர்ந்தோரின் பரிதாப நிலையைக் கண்டறிந்த இராணுவத்தினர் இவர்களுக்கு கஞ்சி காய்ச்சி வழங்குவதற்கு பணம் கொடுத்து உதவி புரிந்ததும் குறிப்பிடத்தக்கது. மீண்டும் தொடர்புகள் முழுமையாக இல்லாது விடினும் ஓரளவுக்கு ஏற்பட்டதைத் தொடர்ந்து சங்கத்தூடாக கிளைகள் திறக்கப்பட்டு நிவாரணம் உட்படப் பொருள்கள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது.

இக்கட்டான நிலையில் மொத்தமாக 869 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட 2,33,584 ரூபா 65சதம் பெறுமதியான பொருள்கள் ஜூன், ஜூலை மாதங்களில் வழங்கிய நிவாரணங்களில் அவர்களது பூரண சம்மதத்துடன் திரும்பப் பெறப்பட்டது. இது தவிர இடம்பெயர்ந்தோருக்கு வழங்கப்படும் நிவாரணங்களில் எந்தவித குறைப்பையோ, வெட்டையோ சங்கம் மேற்கொள்ளவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதுமட்டுமன்றி அரசாங்கத்தால் வழங்கப்படும் நிவாரணத்தை வழங்காமல் விடுவதோ, வெட்டுவதோ இலகுவான காரியமும் அல்ல.

வழங்கப்பட்ட 2,33,584 ரூபா 65 சதம் பெறுமதியான பொருள்களின் 31,969 ரூபா பெறுமதியான பொருள்களை மட்டும் திருப்பிப் பெறப்பட வேண்டிய நிலையில் உள்ளோம். இத்தொகையையும் தருவதற்கு அந்தக் கட்டத்தில் நிவாரணத்தைப் பெற்றவர்கள் தமது பூரண சம்மதத்தைத் தெரிவித்து உள்ளனர்.

இவ்விவரமடங்கிய உரிய ஆவணங்கள் சாவகச்சேரி பிரதேச செயலரின் அங்கீகாரத்துடன் அரச அதிபர் அவர்கட்கும், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்கட்கும் என்னால் நேரடியாக அவர்களது அலுவலகத்தில் சமர்ப்பித்து விளக்கப்பட்டது என்பதனை சகல தரப்பினருக்கும் அறியத் தருகிறேன். பத்திரிகையில் வெளியிடப்பட்ட செய்தி மனித நேயத்திற்கு அப்பாற்பட்டதுமான செயல் என்பதனையும் பச்சிலைப்பள்ளி வாழ் மக்களுக்கு அறிதற்கு சமர்ப்பிக்கின்றேன். மேலும் இவ்விடயத்தை எந்தச் சந்தர்ப்பத்திலும் எக்கட்டத்திலும் உரிய ஆவணங்களுடன் எவருக்கும் நியாயப்படுத்த சங்கத்தின் தலைவர் என்ற ரீதியில் தயாராக உள்ளேன் — என்று உள்ளது. (அ)

ஆசிரியர் குறிப்பு;

தமது சம்மதம் இன்றியே ஜூலை மாதத்துக்குரிய நிவாரணப் பொருள்கள் குறைக்கப்பட்டன என்று மக்கள் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே மேற்படி செய்தி வெளியிடப்பட்டது.

நிவாரணப் பொருள்கள் குறைக்கப்பட்டமை தொடர்பில் சம்பந்தப்பட்டோர் அப்பகுதி பிரதேச செயலருக்கும் அரச அதிபருக்கும் முறைப்பாடு செய்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நாளை

ஐப்பசி 22

செவ்வாய்க்கிழமை

திதி: ஏகாதசி பின்னிரவு 4.54 வரை.

நட்சத்திரம்: பூராட்டாதி பின்னிரவு 4.05 வரை.

உத்தான ஏகாதசி விரதம்

ஜபநேரம்: 10.35 - 12.05

ராகுகாலம்: 3.05—4.35

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

வருங்காலத்தைப் பற்றிச் சிந்தியாதவன் நிகழ்காலத்திலேயே துயர்பெறவேண்டும்.

— கன்பூஷியஸ்

# சமய சந்திதிகளில்

யாழ்ப்பாணம், நவ. 6

வதிரி காளையந்தோட்டம் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி கோயில் புனராவர்த்தன நவகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் புதன்கிழமை காலை 8.55 மணிக்கு இடம் பெறவுள்ளது

கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் இன்று திங்கட்கிழமை காலை ஆரம்பமாகும். எண்ணெய்க் காப்பு நாளை இடம்பெறும். (இ-3)

* * *

கொழும்புத்துறை, நவ. 6

யாழ் வண்ணை அருள்மிகு ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் இன்று திங்கட்கிழமை காலை 10-00 மணியளவில் பேயாழ்வார் உற்சவம் விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை, வழிபாடுகளுடன் நடைபெறும். (இ-30)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 6

ஹற்றன் நஷனல் வங்கி நடத்தும் புத்தாயிரம் ஆண்டுக்குரிய எச். என். பி. வெற்றிக் கேடயத்துக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் இன்று இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி ஆண்களுக்கான — சென் ஜோன்ஸ் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி.

★ பிற்பகல் 4.15 மணி — பெண்களுக்கான — கொக்குவில் இந்துக் கல்லூரி அணி எதிர் வேம்படி மகளிர் கல்லூரி கறுப்பு அணி. (இ-3)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ. 6

புத்தூர் விங்கன் மத்திய சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் விளையாட்டுவிழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணி முதல் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்

பிரதம விருந்தினராக வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் கலந்து கொள்வார்.

(ஐ)

★ ★ ★

வலி வடக்கு, நவ 6

வடமாகாண தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் மானிப்பாய் ஆனந்தா விளையாட்டுக்கழகம் நடத்திவரும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை நடைபெறும் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள அணிகள் வருமாறு:-

மட்டுவில் பாடும் மீன் விளையாட்டுக்கழகம் எதிர் கொக்குவில் காந்திஜீ வி. கழகம். (ஐ-86)

★ ★ ★

வலி. வடக்கு, நவ. 6

வலிகாமம் கல்வி வலய சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை அணிகளிடையேயான -14வயதிற்கு உட்பட்டவர்களுக்கான — உதைபந்தாட்டப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பி. ப. 2.15 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் மாதகல் சென் ஜோசப் வித்தியாலயம்.

★ சுதுமலை இந்திய பாரதி வித்தியாலயம் எதிர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

★ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் பண்டத்தரிப்பு ஜெசிந்தா வித்தியாலயம்.

★ மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் வடக்கு வித்தியாலயம்.

(ஐ-86)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## உடன் விற்பனைக்கு

புதிய நல்ல நிலையிலுள்ள பாவித்த நிலை, ஜன்னல், கதவு, சாப பாட்டுமேசை, கதிரை (புதியவை) அத்துடன் தீராந்தி, வேம்பு, முதிரை, மவுக்கினி ஆகிய மரங்கள் பலகை அறுக்கக்கூடிய நிலையிலுள்ளவை. சீவுளிப்பட்டறை, கடைச்சல் பட்டறை என்பனவும உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அருந்தவச்செல்வம மங்களகுமாரி, துரைவீதி, இணுவில் தெற்கு, இணுவில். (C/13678)

## நாடகமும் அரங்கியலும்

A/L2001,2002 ஆகிய பிரிவின ருக்கு தனியாகவோ, குழுக்களா கவோ கற்பிக்கப்படும். து.துசியந்தன், இல.76, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம். (80179)

## SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலத் தில் கதைக்கப் பயில, திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி மாலை வகுப்புக்கள நடைபெறுகின் றன. ஆசிரியர்: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426(302), காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (80176)

## இலக்கியக் கட்டுரைகள்

சிறுகதை, நாவல், நாடகம், இலக் கிய விமர்சனம் நான்கையும ஒருங்கே தரும் ஒரேயொரு நூல். அவை நான் கையும் எழுதிய அராலியூர் ந.சுந்த ரம்பிள்ளையின் பதினொராவது நூல். க.பொ.த.மாணவர்களுக்கு உரியது. (80202)

## தவறிவிட்டது

இக்கிரானை, கந்தரோடை, சுன் னாகம் என்ற முகவரியை சேர்ந்த திருமதி பரம்சோதி வள்ளிப்பிள்ளை என்பவரது தேசிய அ.அட்டையும், விசேட அ.அட்டையும் (3.11.2000) வெள்ளிக்கிழமை யாழ்.நகரில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் மேற் குறிப்பிட்ட முகவரியில் அல்லது கோப்பாய் அரசினர் வைத்தியசாலை யில ஒப்படைக்கவும். (C/13702)

எழுது ட்டுவாழ் தெற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிவதீபன் என்பவரது விசேட அ.அட்டை (091 036048) 29.10.2000 அன்று சங்கு வேலிக்கும் இணுவிலுக்கும் இடை யில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கள் தயவுசெய்து S.N.V.காந்தன் ரயர் வேக்ஸ், சிவன்கோவில் வீதி, சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (80221)

நீர்வேலி மத்தி, நீர்வேலி என்னும் முகவரியைச் சேர்ந்த நமசிவாயம் யசோதரா என்பவரது தேசிய அ.அட்டை (726780714v), விசேட அ.அட்டை (0903012251) இரண்டும் கரந்தன் சந்திக்கும் நீர்வேலி உப தபாற்கந்தோருக்கும் இடையில தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்காணும் முகவரியில் அல்லது நீர்வேலி உபதபாற் கந் தோரில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் உடன் வழங்கப்படும். (80222)

# மட்டக்களப்பு இளைஞர் கொழும்பில் கைது

மட்டக்களப்பு மாவட்டம் - திருப் பழுகாமம் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் கொழும்பு, கொட்டாஞ் சேனைப் பகுதியில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை மாலை பொலீஸா ரால கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குருகுலசிங்கம் ராஜகுலேந்திரன், கந்தசாமி மதன் ஆகியோரே இவ் வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாடு செல்வதற்காக மேற் படி இளைஞர்கள் கடந்த வெள்ளிக் கிழமை காலையே கொழும்பு சென் றிருந்தனர் எனவும் -

தெரிவிக்கப்பட்டது. (இ-7)


G.C.E. O/L - 2000

விஞ்ஞானம்

மாதிரிப் பயிற்சி வினாத்தாள்

நாவலர் கல்வி நிலையம் (ஆனைப்பந்தி)

றேடியன்ற் கல்வி நிலையம் (கொக்குவில்)

இன்று (06-11-2k) முதல்

3 p.m - 6 p.m வரை

விலை 20/-

(80226) ஆசிரியர்:- E. காந்தரூபன்


# 3ஆம் ஆண்டு நெஞ்சகலா நினைவலைகள்



அமரர்

## வல்லிபுரம் சிவசுந்தரம்

ஜனனம் 07-08-1940

மரணம் 26-10-1997

திதி : தசமி 06.11.2000

காலன் உனை வென்றாலும்

காலனை உன் இலட்சியம் வென்றதப்பா!

ஆண்டு மூன்று சென்றாலும் உங்கள் அறிவுரைகள்

எம்மை ஆளுதப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை

வேண்டுகின்றோம்.

உ.சன், மிருசுவில். (80190)

மனைவி, பிள்ளைகள், மருமகள்


YOGI HOME SCIENCE ACADEMY

புதிய வகுப்புகள் ஆரம்பம்

10-11-2000 முதல் அனைத்து மனையியல் பயிற்சி வகுப்புகளும் ஆரம்பமாக உள்ளன.

சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்:-

75, அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.

(வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக) (80208)


ஓம் கணபதி

# கும்பாபிஷேக தின விழா

வட்டுக்கோட்டை துணவி அரசடிப் பிள்ளையார் கோயில் கும்பாபிஷேக தின விழாவும் 108 சங்காபிஷேகமும்

09-11-2000 வியாழக்கிழமை நடைபெறும்.

பிரதம குரு: சிவஸ்ரீ க.சிவசுப்பிரமணியக் குருக்கள்

பிரம்மஸ்ரீ ம.கேசவசர்மா

காலை 10.30 மணிக்கு

விசேட மேளக்கச்சேரி

திரு. என். கே. பத்மநாதன் குழுவினர்

திரு. வி. கே. கானமூர்த்தி குழுவினர்

திரு. என். ஜெயராமன், வடலியடைப்பு.

பிற்பகல் 4 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று விநாயகப் பெருமான் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.

- ஆலய பரிபாலன சபை.


(C/13705)

பிரகாஷ் ஜுவலறி

மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.

நவீன டிசைன்களில் நகைகள் ஓடருக்கு செய்து தருபவர்


உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருஷம் ஐப்பசித் திங்கள் 23ம் நாள் (08.11.2000) புதன்கிழமை பகல் 11.02 மணிமுதல் 12.02 மணிவரையுள்ள மகரலக்கின சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது புத்திரன் திருநிறை செல்வன் | எமது புத்திரி திருநிறை செல்வி |
| மதுராகரன் | கோமதி |
| (யா/பல்கலைக்கழகம்) | (ஆசிரியை, யா/உ.சன் இராமநாதன் ம.வி) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இறையருள் துணைகொண்டு திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத் தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமணம் நடைபெறும் இடம்:- திரு.சி.தயாநிதி, வெல்லம்பற்றை, கரவெட்டி மத்தி, கவுந்தில்.

(சாமியன் அரசடி வீதி ஊடாக சம்பந்தர் கடைச்சந்திக்கு அருகில்)

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி அ. நடராசா, நாவற்காடு, வரணி

இரு வீட்டார் அழைப்பு

திரு. திருமதி ஆ. இளையதம்பி, உ.சன், மிருசுவில்.

(80195)

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருஷம் இன்று ஐப்பசி மாதம் 21ஆந் திகதி (06.11.2000) திங்கட்கிழமை பகல் 12.30 மணிமுதல் 1.30 மணிவரை வரும் சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது புத்திரன் திருநிறை செல்வன் | எமது புத்திரி திருநிறை செல்வி |
| யோகேந்திரன் | கௌரி |
| (லலிதா ஜுவலர்ஸ் - யாழ்ப்பாணம்) | (ஆசிரியை, யா/புனித சாள்ஸ் ம.வி.) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இறைவன் திருவருளால் திருமணம் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் இனிது நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் இஷ்டமித்திர குடும்ப சமேதராய்ச் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி சா. நாராயணசாமி குடும்பத்தினர், 132, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இரு வீட்டார் அழைப்பு

திரு. திருமதி க. சச்சிதானந்தன் குடும்பத்தினர், 11, அரசடி லேன், வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம். (நாவற்குழி)

(80185)

# பிரதி அமைச்சர்களும் அவர்களுக்குரிய அமைச்சுக்களும்; விவரம் வருமாறு

கொழும்பு,நவ.6

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்ற பிரதி அமைச்சர்கள் விவரம் வருமாறு:-

| பிரதி அமைச்சர்கள் | அமைச்சுக்கள் |
|---|---|
| எதிரி வீர பிரேமரட்ண | - புத்தசாசன, சமய விவகாரம் |
| நொயல் பத்மசிறி | - தோட்டத்துறை |
| சமால் ராஜபக்ஷ | - துறைமுக அபிவிருத்தி, தெற்கு அபிவிருத்தி |
| சரத் கீர்த்திரட்ண, டி.எம்.தசநாயக்க | - விவசாயம் |
| அப்துல் காதர் | - மீன்பிடி, நீர்வள அபிவிருத்தி |
| சந்திரசிறி கஜதீர | - தொழிற்பயிற்சி |
| அப்துல் மஜித் | - தபால், தொலைத் தொடர்பு |
| டலஸ் அழகப்பெரும | - சமுர்த்தி, கிராமிய அபிவிருத்தி, நாடாளு மன்ற விவகாரம், மலைநாட்டு அபிவிருத்தி |
| சந்தன கத்திரி ஆராய்ச்சி, ஜெகத் பால சூரிய | - நகர அபிவிருத்தி, நிர்மானம், பொதுப்பயன்பாடு |
| பீலிக்ஸ் பெரேரா | - மின்சக்தி, எரிபொருள் |
| அளுத்கம மகிந்தானந்த, | - முனிதாஸ பிரேமச்சந்திர, நெடுஞ்சாலை |
| கரேந்திர கொரயா | - வெளிநாட்டு விவகாரம் |
| பியதாச கமகே | - அரசியல் சட்ட விவகாரம், கைத்தொழில் அபிவிருத்தி |
| விஜயமுனி சொய்சா | - மகாவலி அபிவிருத்தி |
| நீல் ரூபசிங்க | - தொழில் |
| ஜானக பண்டார தென்னக்கோன், லயனல் குணவர்த்தன | - சுகாதாரம் |
| பந்து பண்டார நாயக்க | - வனவளம், சுற்றாடல் |
| சாந்த பிரேமரட்ண | - நீர்ப்பாசன, நீர்வள முகாமை |
| ஹீன் மாத்தையா லியனகே | தோட்ட உட்கட்டமைப்பு, கால்நடை அபிவிருத்தி |
| நந்தசேன ஹேரத் | - உணவு, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி |
| டி.பி. எக்கநாயக்க | - கலாசாரம் |
| மேர்வின் சில்வா | - சமூக சேவைகள், மீனவ சமூக வீடமைப்பு |
| பிரியங்கர ஜெயரத்ன | - இளைஞர் விவகாரம் |
| சோமசுந்தரம்கணேசமூர்த்தி, நூர்தின் மசூர் | - இன விவகாரம், தேசிய ஒருமைப்பாடு |
| ஜயதிஸ்ஸ ஆராய்ச்சிகே ரணவீர | - காணி அபிவிருத்தி, சிறுபயிர் ஏற்றுமதி |
| பி.சுமதிபால | - வடபகுதி அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு, வடகிழக்கு தமிழர் விவகாரம் |
| தயாரட்ண, ஏ.எல்.எம்.அத்தாவுல்ல | - கல்வி |
| குமார வெல்கம | - போக்குவரத்து |
| எதிரிவீர வீரவர்த்தன | - கிழக்குப் புனர்வாழ்வு, கிராமிய அபிவிருத்தி |

## ஊர்காவற்றுறை

# கிராம சேவையாளர் பிரிவுகளில் சமுர்த்தி செயலணிகள் அமைப்பு

காரைநகர்,நவ.6

சமுர்த்தித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துமுகமாக ஊர்காவற்றுறை அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிராம சேவையாளர் பிரிவுகள்தோறும் சமுர்த்தி செயலணிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை காரைநகர் பகுதியில் மட்டும் ஜே/40,ஜே/43, ஜே44,ஜே/45,ஜே/46,ஜே/47, ஜே 48 ஆகிய ஏழு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் சமுர்த்தி செயலணிகள் அமைக்கப்பட்டுள்ளன. நாளை 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு காரைநகர் வடமேற்கு ஜே/41 கிராம உத்தியோகத்தர் பிரிவில் சமுர்த்திச் செயலணி அமைக்கப்பட உள்ளது.

தொடர்ந்து 9 ஆம் திகதி வியாழக்கிழமை காரைநகர் கிழக்கு ஜே/42 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் சமுர்த்தி செயலணி அமைக்கப்படும்.

(இ-73)

# பங்கீட்டு அட்டை பெறுவதில் சிரமம்

வலி.வடக்கு,நவ.6

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்டோர் மீளாய்வு செய்யப்பட்ட புதிய பங்கீட்டு அட்டைகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை அனுபவித்துவருகின்றனர்.

அண்மையில் உணவு நிவாரண அட்டைகளில் பெரும் மோசடி இடம்பெற்றிருந்தது கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து புதிய பங்கீட்டு அட்டைகளை வழங்கும் பணி கிராம அலுவலர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்டது.

பிரதேச செயலகத்தைச் சேர்ந்த குழுவினர் குறிக்கப்பட்ட ஒரு நாள் கிராம அலுவலர்களின் அலுவலகங்களுக்குச் சென்று, அங்கு வைத்து புதிய பங்கீட்டு அட்டைகளை வழங்கினர். சில கிராம அலுவலர் பிரிவுகளில் இரண்டாவது தடவையாகவும் ஒரு நாள் பங்கீட்டு அட்டைகள் விநியோகிக்கப்பட்டன. பின்னர் எஞ்சிய பங்கீட்டு அட்டைகள் அனைத்தும் பிரதேச செயலகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு வைத்தே வழங்கப்படுகின்றன.

இவற்றைப் பெறுவதற்காக வயோதிபர்களும் மற்றும் தொழிலுக்குச் செல்பவர்களும் பெரும் சிரமம் அடைகின்றனர். பங்கீட்டு அட்டைகளைப் பெற இவர்கள் பிரதேச செயலகத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது.

தத்தமது பிரிவுகளில் உள்ள கிராம அலுவலர்களின் அலுவலகங்கள் மூலம் அவற்றை விநியோகித்தால் சிரமமின்றி அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று பலரும் தெரிவித்துள்ளனர். (ஐ-86)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி

ப.பகுரூபா அவர்களின்

அன்புத் தாயார்

## திருமதி பரமேஸ்வரி பரமகுரு

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

3ஆம் வருட மாணவர்கள்,
நாட்டியப் பிரிவு,
இராமநாதன் நுண்கலைப் பீடம்,
யாழ். பல்கலைக் கழகம்.

(C/13 724)

# இரவு மழை பெய்த சமயம் வீடு புகுந்து ரீ.வி, டெக், சைக்கிள்கள் சூறை!

## கட்டப்பிராயில் சனியன்று சம்பவம்

வலி.கிழக்கு,நவ.6

இரவுவேளை வீட்டின் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் கதவுகளைத் திறந்து வீட்டில் இருந்த பெறுமதிவாய்ந்த பொருள்களைச் சூறையாடிக் கொண்டு தப்பிச் சென்றனர்.

கல்வியங்காடு கட்டப்பிராயில் உள்ள ஒரு வீட்டில் சனிக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

அன்றிரவு மழை பெய்து கொண்டிருந்தவேளை திருடர்கள் துணிகரமாக இத் திருட்டில் ஈடுபட்டுள்ளனர்.

வீட்டின் விறாந்தையில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ டெக், வானொலிப் பெட்டி மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்று, மூன்று புதிய சைக்கிள்கள் உட்பட ஒருலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன. வீட்டில் உள்ள கோழிப் பண்ணையில் இருந்த முட்டைகளையும் திருடர்கள் விட்டுவைக்கவில்லை.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருக்கின்றது.

கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய் பகுதிகளில் அண்மைக் காலமாகத் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதால் மக்கள் பீதியடைந்துள்ளனர். (ஐ-180)

# சுவிஸில் 'அரசியல் இரட்டை வேடம்'

ஜெனிவா,நவ.6

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'அரசியலில் இரட்டை வேடம்' (Politics of Duplicitey) என்ற நூல் அண்மையில் சுவிஸ் நாட்டிலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

1995ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும் சந்திரிகா அரசுக்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்கள் குறித்து எழுதப்பட்ட இந்த நூல் முதலில் ஏற்கனவே லண்டனில் வெளியிடப்பட்டது.

ஜெனீவாவில் உள்ள சர்வதேச மத்திய நிலையத்தில் நடைபெற்ற இந்த அறிமுக விழாவில் யாழ்.மாவட்டத்தின் முன்னாள் குரு முதல்வரும் தற்போது ஜேர்மனியில் குருவாகப் பணியாற்றுபவருமான வண.பிதா. எஸ்.ஜே.இமானுவேல் நூலை அறிமுகம் செய்து வைத்தார்.

"இன்ரர் பெயித்" நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் சாள்ஸ் கிரேஸ், ஐ.நாவில் பதிவுசெய்யப்பட்ட தொண்டர் நிறுவனமான மக்கள் விடுதலைக்கும் உரிமைகளுக்குமான சர்வதேச கழகத்தைச் சேர்ந்த திருமதி வெரினா கிராவ உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (அ)

# கருத்தரங்கு

காரைநகர்,நவ.6

வடக்கு - கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிக் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை தொடக்கம் நான்கு நாள்கள் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிக் கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறும்.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் திருமதி.ப.திலகநாயகம் போல் பிரதம விருந்தினராகவும், யாழ் செயலக நிர்வாக உத்தியோகத்தர் வே. வீரபுத்திரப்பிள்ளை கௌரவ விருந்தினராகவும், யாழ்.செயலக கிராம அபிவிருத்தி மட்ட அலுவலர் செ. செல்வரட்ணம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (இ-73)

# கிரிக்கட் அணியைத் தெரிவு செய்வதற்கு பயிற்சிப் பாசறை

யாழ் மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் பாடசாலைகளில் இருந்து 15 வயதுப் பிரிவு அணி ஒன்று தெரிவு செய்யப்படவுள்ளது.

இந்த அணித்தெரிவு தொடர்பான பயிற்சிப் பாசறை ஒன்று இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும்.

துடுப்பாட்டச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் 4 மாணவர்களை பயிற்சிக்குரிய உபகரணங்களுடனும் பொறுப்பாசிரியருடனும் இந்தப் பயிற்சிப் பாசறைக்கு வருகை தருமாறு துடுப்பாட்டச் சங்கத்தின் தலைவர் கேட்டுள்ளார். (இ-7)

# சுயதொழில் முயற்சிக்கடன்

சண்டிலிப்பாய்,நவ.6

சில்லாலைக் கிராம அபிவிருத்திச் சங்கம், மாதகல் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகிய இரு கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாக அப்பகுதிகளில் மக்களுக்கு சுயதொழில் முயற்சிக்கடன் வழங்கப்படவுள்ளது.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் நுண் கருத்திட்டத்தின் கீழ் இந்த சுயதொழில் முயற்சிக்கடன் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# 48 முதியோர்கள் கௌரவிப்பு

காரைநகர்,நவ.6

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற முதியோர் தின விழாவில் 48 முதியவர்கள் கௌரவிக்கப்பட்டனர். அவர்களுக்கு அன்பளிப்புப் பொருள்களும் வழங்கப்பட்டன.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் ஓய்வு பெற்ற ஆசிரியர் ந.விஜயரத்தினம் பிரதம விருந்தினராகவும், வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் கௌரவ விருந்தினராகவும் காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம், தியாகராசா ம.ம.வித்தியாலய அதிபர் சு.வேலாயுதபிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 24 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இருந்தும் தலா இரண்டு பேராக 48 முதியவர்கள் கௌரவிக்கப்பட்டனர். ஊர்காவற்றுறை கோட்டப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், நாடகமும் நடைபெற்றன. இதனை அடுத்து பாடசாலைகள் மட்டத்தில் சர்வதேச முதியோர் தினம் தொடர்பாக நடத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

(இ-73)

## சிங்களத் தீவிரவாத அமைப்புகள் அங்கம் வகிக்கும்

# தேசியக் கூட்டுக் குழுவும் சமாதானத்துக்கு எதிர்ப்பு

கொழும்பு,நவ.6

பல சிங்களத் தீவிரப் போக்குடைய அமைப்புகள் அங்கம் வகிக்கும் தேசிய கூட்டுக் குழுவும் சொல் ஹெய்ம்- பிரபா பேச்சுக்களுக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

பிரஸ்தாப கூட்டுக்குழுவின் பொதுச் செயலாளர் கலாநிதி பியசேன திஸநாயக்கா இது குறித்துக் கருத்துத தெரிவிக்கையில், நோர்வே இலங்கையின் இறைமையில் தலையிடுவதாகக் கண்டித்தார்.

பேச்சு வார்த்தை நடத்துவதற்கு வடக்கிலுள்ள படைகளை வாபஸ் பெற வேண்டும் என்பது உட்பட பிரபாகரன் முன்நிபந்தனை விதித்திருப்பதாக லண்டனில் உள்ள புலிகள் இயக்கத்தின் தலைமையகம் தெரிவித்திருக்கையில்-

அவ்வாறு முன் நிபந்தனை எதுவும் விதிக்கப்படவில்லை என்று நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல் ஹெய்ம் கூறியிருப்பது- பெரும் முரண்பாடுடைய கூற்றாகும்- என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# ஏழாலையில் மிதிவெடி

யாழ்ப்பாணம்,நவ.6

தோட்டத்தில் வேலையில் ஈடுபட்டிருந்தவர் வேலை முடித்துக்கொண்டு வெளியேறிய சமயம் மிதிவெடியில் சிக்குண்டு இடதுகால் முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

ஏழாலை மேற்கில் நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில், கார்த்திகேசு சிவரஞ்சன் (வயது 34) என்பவரே படுகாயமடைந்தார். இவர் ஒரு தொண்டராசிரியராவார்.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா சிவனேசன் (ஜெயராசா)

(ஓய்வு பெற்ற ஊழியர், இ.போ.ச.- பருத்தித்துறை)

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சிவனேசன் (ஜெயராசா) நேற்று (5.11.2000) காலை 10.00 மணிக்கு காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான தம்பையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், ரேவதியின் அன்புக் கணவரும், வைத்தீஸ்வரனின் அன்புத் தந்தையும், பாக்கியத்தின் அன்புச் சகோதரனும், சண்முகம், சறோஜா, சந்திராணி, மல்லிகா ஆகியோரின் மைத்துனரும், பிரேமாவதி, பத்மாவதி, உருத்திரன் (நோர்வே), பரமா ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற குட்டித்தம்பி மற்றும் சீவரத்தினம் தம்பதிகளின் மருமகனும், சிவகுரு - தங்கம்மா தம்பதிகளின் பேறாமகனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (6.11.2000) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வைத்தீஸ்வரன
(மகன்)

மாடந்தை,
வல்வெட்டி.

(80239)

சித்த வைத்தியக்லாநிதி

## கோ.சின்னத்தம்பி

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சித்தவைத்திய கலாநிதி கோ.சின்னத்தம்பி அவர்கள் 04.11.2000 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அசுபதியின் அன்புக்கணவரும், வேலாயுதம் (முன்னாள் கல்விப் பணிப்பாளர்), கண்மணி, பராசக்தி, தங்கரத்தினம், பாலகுருநாதன்(சிமெந்துக் கூட்டுந்தாபனம் - காங்கேசன்துறை), கௌரிதேவி, கங்காதேவி, ஸ்ரீகிருஷ்ணகாந்தன் ஆகியோரின் தந்தையும் சறோஜனாதேவி, மார்க்கண்டு, இரத்தினசிங்கம், தவராசா, ஸ்ரீரஞ்சனிதேவி, நிர்மலிங்கம், குணரத்தினம், செல்வரதி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பூவோடை மயானத்தில் நேற்று (05.11.2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.தவராசா(மருமகன்)
J/184 கிராமசேவகர்,
உடுவில் மத்தி.

அம்பலவாணர் வீதி,
உடுவில்.

(C/13718)



யாழ்.மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை நாடாளுமன்றக் கட்டடத்தில் சந்தித்துப் பேசியபோது எடுக்கப்பட்ட படம்.
(செய்தி முதலாம் பக்கத்தில்)

# தமிழ் எம்.பிக்கள் நாடாளுமன்றில் ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும்

## வல்வை நகரசபை கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.6

பதினொராவது நாடாளுமன்றக் கூட்டத்தொடர் எதிர்வரும் 9ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கும் நிகழ்வின்போது சகல தமிழ் எம்.பிக்களும் ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும். பண்டாரவளைப் படுகொலை, சந்திரசேகரன் கைது ஆகியவற்றைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட வேண்டும்

மேற்கண்டவாறு வல்வெட்டித்துறை நகரசபை சகல தமிழ் எம்.பிக்களிடமும் கோரியுள்ளது.

வல்வெட்டித்துறை நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. மேற்படி கூட்டம் நகரசபை முதல்வர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் கடந்த 2ஆம் திகதி இடம்பெற்றது.

நாடாளுமன்றத்துக்குள் ஆர்ப்பாட்டம் நடத்துவது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானம் பற்றிய முழு விவரமும் வருமாறு:-

புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்ப விழாவில் ஜனாதிபதி, வெளிநாட்டுத் தூதுவர்கள் கலந்து கொள்வர். இந்த நிகழ்வில் நாடாளுமன்ற செங்கோலை எடுத்து வரவிடாமல் தடுத்து கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக நாடாளுமன்றத்துள் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட வேண்டும்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் பலாத்காரமாக நாடாளுமன்றத்தைவிட்டு வெளியேற்றப்படுவார்களானால் நாடாளுமன்றத்துக்கு வெளியே உள்ள ஆராய்ச்சி மணியை அடித்து இனவெறி அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புக்காட்ட வேண்டும்

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் பேசும் மக்களின் சார்பில் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் - இப்படித் தீர்மானிக்கப்பட்டது. (இ-7)

# சந்திரசேகரன் தொடர்பான அறிக்கை இன்று சட்டமா அதிபரிடம் கையளிப்பு

மலையக மக்கள் முன்னணித் தலைவரும், ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் மீதான ரகசியப் பொலீஸ் விசாரணைகள் யாவும் முடிவடைந்து விட்டன. இது தொடர்பான அறிக்கை இன்று சட்டமா அதிபரிடம் கையளிக்கப்படும் என பதில் பொலீஸ்மா அதிபர் ரி.ஆனந்தராஜா தெரிவித்தார்.

இதற்கிடையில் சந்திரசேகரனை தொடர்ந்தும் தடுத்து வைப்பதற்குரிய அவசியத்தைஆராயுமாறு நீதியமைச்சர் பட்டி வீரக்கோன் சட்டமா அதிபருக்கு வேண்டுகொள் விடுத்துள்ளார்.

தொடர்ந்தும் அவரைத் தடுத்து வைத்திருக்க அவசியம் இல்லாவிட்டால் விடுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் குறித்து பொலீஸாருக்கு உத்தரவிடவேண்டும் என்று சட்டமா அதிபரிடம் அவர் கடிதம் மூலம் கேட்டுள்ளார். (இ-ரி-8)

### ஈழத்தமிழ்க்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பவர் ஆஸ்பத்திரியில் உயிரிழந்தார். காயம் அடைந்தவர்களில் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி மூக்கை இழந்துள்ளார். மற்றவர் கத்திக்குத்துக்கு இலக்கானார்.

இதே போன்ற கோஷ்டி மோதல சம்பவம் ஒன்று சில நாள்களுக்கு முன் கனடாவின் ரொறண்டோ நகரிலும் இடம்பெற்றது தெரிந்ததே. (இ-3)

### குண்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று மீட்கப்பட்டது.

குண்டு மீட்கப்பட்ட சம்பவத்தை அடுத்து விசாரணை மேற்கொண்ட பொலீஸார் சம்பந்தப்பட்ட பஸ்ஸில் பயணம் செய்த தமிழ் ஆசிரியர் ஒருவரைக் கைதுசெய்தனர் எனவும்

பின்னர் ஆசிரியர் கொடுத்த தகவலின் பேரில் அட்டாளைச் சேனையில் வைத்து நேற்று மாலை மூன்று தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர் எனவும் - தெரிவிக்கப்பட்டது. (இ-7-)

### திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டது.

துறைமுகத்தைத் தாக்குவதற்காக விடுதலைப்புலிகள் தற்கொலைக் குண்டுதாரிகளை அனுப்பி வைத்திருக்கின்றனர் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

தப்பிச்சென்ற வள்ளத்தைத் தாக்குவதற்காக துறைமுகத்தின் தெற்கு புறமுள்ள பிரதேசங்கள் மீது பிரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத்தாக்குதலில் கடற்படையினர் தரப்பில் எவரும் காயமடையவில்லை - என்றுள்ளது. (இ-3-ரி)

### மாவீரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் 9ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கு சமுகமளிக்கும் அமைச்சர்களை இலக்கு வைத்து தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்ற புலனாய்வுப் பிரிவின் தகவல்களை அடுத்து கொழும்பு நகரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-8-ரி)

## பத்திரிகையாளர் காலமானார்

பிரபல பத்திரிகையாளர்களில் ஒருவரான சபாரத்தினம் சூரியகுமாரன் இந்தியாவில் தனது 54 ஆவது வயதில் காலமானார்.

1965 ஆம் ஆண்டில் பத்திரிகைத் துறைக்கு காலடி எடுத்து வைத்த இவர் வீரகேசரி, தினகரன் போன்ற பத்திரிகைகளில் 35 வருட காலம் கடமையாற்றினார்.

சண்டிலிப்பாயை இவர் பிறப்பிடமாகக் கொண்டவர். சில காலம் நோய்வாய்ப்பட்டு இந்தியாவில் தங்கியிருந்தார். (இ-5)

### அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்துக்கு தற்சமயம் கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வது அதன் தார்மீகப் பொறுப்பும் கடமையும் ஆகும்.

பேச்சு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.அதிலிருந்து நாம் பின்வாங்கவில்லை.

இந்தப் பேச்சில் விடுதலைப்புலிகள் முக்கிய தரப்பாக இருப்பதால், அரசாங்கம் அரசியல் முன்னறிவுடைய ஒரு பிரதிநிதியை பேச்சில் கலந்துகொள்ள நியமிக்கவேண்டும் என்றார். (இ-3-ரி)

## உடனடியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தீர்மானத்தின் பிரதிகளை எதிர்க்கட்சித் தலைவர், தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் தெற்கில் இயங்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோருக்கும் -

ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனானுக்கும்- அனுப்புவதென அங்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் அனுபவிக்கும் அனர்த்தங்கள் பற்றி அவர்களுக்கு எடுத்துக் கூறுவதுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்காக எடுக்கப்படும் முயற்சிகளுக்கு கட்சி பேதமின்றி ஒத்துழைப்பு வழங்கும்படி அவர்களுக்கு தீர்மானத்தை உள்ளடக்கி அனுப்பப்படும் மகஜரில் கோருவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

இந்த மகஜரின் பிரதியை விடுதலைப்புலிகள் தலைவர் வே.பிரபாகரனுக்கு அனுப்புவதென்றும்-

நோர்வே நாட்டுத் தூதரை வரவேற்று சமாதானப் பேச்சுக்குத் தாம் தயாராய் இருப்பதை உறுதிப்படுத்தியதற்காக அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து மடல் அனுப்புவதென்றும் - அங்கு விசேட கலந்துரையாடலில் மேலும் முடிவாகியது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனுக்கும் பண்டாரவளை தடுப்பு முகாமில் படுகொலை செய்யப்பட்ட தமிழ்க் கைதிகளுக்கும் கூட்ட ஆரம்பத்தில் இரு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்து சமயப் பேரவை, இந்து குருமார் ஒன்றியம், மனித முன்னேற்ற நடுநிலையம், அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம், வங்கியாளர் சங்கம், அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கம், வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், லயன்ஸ் கழகம் மற்றும் சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துக்குமான குழு, மகளிர் அபிவிருத்தி நிலையம், வடபிராந்திய இந்து இளைஞர் பேரவை, வணிகர் கழகம், நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழு, கூட்டுறவுச் சபை, யாழ்.மாவட்ட நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் உட்பட மொத்தம் 45 அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் நேற்றைய விசேட கலந்துரையாடலில் பங்குபற்றினர். (அ-இ-3-6)


இன்றைய
வீடியோ CD வெளியீடு
கார்த்திக், மாளவிகா,
விவேக்
நடிப்பில் -
சீனு
திரையரங்குகளுக்கு
முன்வரிசை
மூர்த்தி வீடியோ
மானிப்பாய்
T.P.NO.:2884
(C/13719)

சிந்து
திரை அரங்கு
உரும்பிராய்.
கார்த்திக், மாளவிகா,
மற்றும் பலர் நடித்த
சீனு
(CD பிரதி)
(புதிய வெளியீடு)
காட்சிகள்:10.30,3.00
(C/13720)

புலமைப்பரிசில் திட்டம்
2001
விண்ணப்பிக்கத் தவறாதீர்கள்
ஆயிரம் ஆயிரம் மாணவர்களின் எதிர்பார்ப்பிற்கு பாத்திரமான எமது புலமைப்பரிசில் திட்டம் 1ம் திகதி முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
பல்வேறுபட்ட தரப்பினருக்கும் பயன்படக்கூடியவகையில் நன்கு திட்டமிடப்பட்ட பயிற்சி நெறிகள் இவை என்பது குறிப்பிடத்தக்கது.
விண்ணப்பப்படிவங்களை எமது அலுவலகங்களிலும், உங்கள் பகுதிகளில் உள்ள பிரபல புத்தக நிலையங்களிலும் பெறலாம்.
விண்ணப்ப முடிவுத்திகதி :
25/11/2000
IIS,
100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

HITECH College of Computer Studies
Kulappitty Jn., Kokkuvil.
புதிய பிரிவுகள் ஆரம்பம்
FAST TRACK COURSES
| Courses | | Duration |
|---|---|---|
| Certificate in | * Visual Basic 6.0 | 1½ months |
| Diploma in | * MS. Office 2000 | 2 months |
| Certificate in | * Hardware | 1½ months |
| Certificate in | * Desktop Publishing | 2 months |
Closing Date (Admission) :- 13th November
Courses Commence :- 15th Nov. & 18th Nov.
(80212) DIRECTOR

TRRO CTC PRINTERS
ஆய்வுக் கட்டுரைகள்
வாழ்த்து மடல்கள்
விளம்பர துண்டுப் பிரசுரங்கள்
சான்றிதழ்கள்
வினாத்தாள்கள்,கையேடுகள்
இவையனைத்தையும் கணனி மூலம் குறைந்த செலவில், சிறந்த தரத்தில்.....
1. Photo Quality Printer இல் வண்ணப்பிரதி எடுக்கவோ
2. Off Set பிரின்ற் செய்திடவோ
3. Laser பிரின்ற் செய்திடவோ
4. Stencil பொறித்து றோணியோ செய்திடவோ
இன்றே நாடுங்கள்....
TRRO COMPUTER TRAINING CENTER
இராமநாதன் கல்லூரி முன்பாக, மருதனார்மடம், சுன்னாகம். (C/13722)
மானிப்பாய் வீதி, உரும்பிராய்.

கிறிஸ்ரல் கல்வி நிலையம்
நெல்லியடி.
அளவையியலும் .விஞ்ஞான முறையும்
2002 - குறியீட்டு அளவையியல் - 7.30 A.M
2001 - கருதுகோள் - 8.30 A.M
ஆரம்பம்: 12.11.2K (ஞாயிறு)
ஆசிரியர்: S.R.J. சுதன்
(80232)

கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A. (F.M.Spl.)
A/L 2002
சொத்து விற்பனை
Tue., Thu. 3.30-4.30 p.m.
BEACON
வெலிங்டன் சந்தி அருகில்
(80183)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.11.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.